உதயன்

விலை ரூபா 6.00

டர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 16 வெள்ளிக்கிழமை (01-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:210

# யாழ். தேர்தல் களத்தில் 15 அணிகள்!

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ். மாவட்ட தேர்தல் களத்தில் 15 அணிகள் குதித்துள்ளன. இந்த அணிகளில் பெரும்பாலானவை இன்று தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

களம் இறங்கியுள்ள அணிகள் வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணி.
ஈ.பி.டி.பி.
★ புளொட் - ஈரோஸ் கூட்டணி.
★ ரெலோ தலைமையிலான சுயேச்சைக்குழு.
★ அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி.
★ ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) சுயேச்சைக் குழு.
★ ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி) சுயேச்சைக் குழு.
★ ஜனநாயக இடதுசாரி முன்னணி.
★ மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி).
★ ஐக்கிய தேசியக் கட்சி.
★ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.
★ முஸ்லிம் ஆதரவு சுயேச்சைக் குழு.
★ ஹரிச்சந்திர விஜேதுங்க தலைமையிலான சிங்கள மகாசம்மத்த பூமிபுத்திர கட்சி.
★ வேல்முருகு தங்கராசா தலைமையிலான சுயேச்சைக் குழு.
★ ஜனநாயக மக்கள் பேரவை.

# முதல்வர் ஸ்ரீகாந்தா உட்பட ரெலோ பிரமுகர்கள் வருகை

யாழ்ப்பாணம்,செப்.1

ரெலோ அமைப்பின் முதல்வர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மற்றும் வல்வை நகரசபைத் தலைவர் என்.கே.சிவாஜிலிங்கம் உட்பட ரெலோ முக்கிஸ்தர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பொதுத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான பணிகளை இங்கு மேற்கொள்வதற்காகவே இவர்கள் வருகை தந்துள்ளனர்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து இவர்கள் இன்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருக்கின்றனர் என்று அந்த அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் என்.கே.விந்தன் தெரிவித்தார். (ஐ)

# வேல்முருகு தங்கராசா தலைமையில் சுயேச்சைக்குழு போட்டியிடும்

யாழ்ப்பாணம்,செப்.1

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான வேல்முருகு தங்கராசா தலைமையில் சுயேச்சைக்குழு ஒன்று போட்டியிடுகின்றது.

வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு அவரும் தொகுதி அமைப்பாளர்களும் கொழும்பில் இருந்து இன்று இங்குவர இருக்கின்றனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிடும் முடிவில் இருந்து விலகியதை அடுத்து வேல்முருகு தங்கராசா தலைமையில் சுயேச்சைக் குழு போட்டியிடுகின்றது.

சுயேச்சைக்குழுவில் பெரும்பாலும் ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சி ஆதரவாளர்கள் இடம்பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# பிரதி அமைச்சர் தப்பினார்!

கொழும்பு,செப்.1

ஹேரா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் பிரதி அமைச்சருமான அதுர நிமலஶ்ரீ ஜேவசிங்க கொலை முயற்சியிலிருந்து தப்பினார்.

காஹவத்த பொலீஸ் பிரிவின் கீழுள்ள ரணவிரு என்ற கிராமத்துக்குச் சென்று நேற்று முன்தினம் இரவு தனது ஆதரவாளர்களைச் சந்தித்துவிட்டு திரும்பும்போது, அவர் வந்த வழியில் மதகு ஒன்றின் கீழ் இருந்து குண்டு ஒன்று மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8)

# பொ.ஐ.முன்னணிக்கான ஆதரவை சிறிமானி வாபஸ்!

கொழும்பு,செப்.1

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஜனநாயக ஐக்கியமுன்னணி (லலித் பிரிவு) போட்டியிடுவது தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை அந்த முன்னணி வாபஸ் பெற்றுள்ளது.

குறிப்பிட்ட சில விடயங்களில் இரண்டு கட்சிகளுக்கிடையிலும் உடன்பாடு காணப்படாத காரணத்தினாலேயே தேர்தலில் இணைந்து போட்டியிடுவதாக ஏற்கனவே தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அந்த முன்னணியின் தலைவி சிறிமானி லலித் அத்துலத் முதலி தெரிவித்தார். (இ-9)

# இலங்கை தமிழரசுக் கட்சியின் பெயரில் வவுனியாவிலும் கண்டியிலும் வேட்புமனு!

கொழும்பு,செப்.1

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் வவுனியாவிலும் கண்டியிலும் போட்டியிடுவதற்கு நேற்று வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தெஹிவளையைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக்காரரான பி.கே.ஜி.ரஞ்ஜித் என்பவரே இந்த இரு மாவட்டங்களிலும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். இவரது கட்சி சார்பில் கண்டியில் பதினைந்து பேரும் வவுனியாவில் 9 பேரும் போட்டியிடுகின்றனர். வவுனியாவில் தாக்கல் செய்த வேட்பு மனுவில் முதன்மை வேட்பாளராக ரஞ்ஜித்தின் பெயரே இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக கூட்டணி சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரியிடம் கேட்ட சமயம் தேர்தல் ஆணையாளருடன் இன்று இதுவிடயமாகப் பேச இருப்பதாகக் கூறினார். (இ-9)

# ஆனந்தசங்கரி தலைமையில் இன்று கூட்டணி வேட்புமனு

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் இன்று தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை முதன்மை வேட்பாளராகக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

வேட்பாளர்களின் விவரம் வருமாறு :-

வீ.ஆனந்தசங்கரி(முதன்மை வேட்பாளர்), மாவை சேனாதிராஜா, கோ.சி.வேலாயுதம், என்.ரவிராஜ், கே.எஸ்.பாலகிருஷ்ணன், கே.சின்னத்துரை, எஸ்.முத்துலிங்கம், எஸ்.சிவமகாராசா, எஸ்.அரவிந்தன், எஸ்.சேவியர், எஸ்.வைத்திலிங்கம், தம்பு லோகநாதபிள்ளை. (இ-3)

# அஷ்ரப் - பௌசி லடாய்: சந்திரிகா முற்றுப்புள்ளி!



## ஜே.வி.பியும் இங்கு போட்டி

கொழும்பு,செப்.1

யாழ்.மாவட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி போட்டியிடவிருப்பதாக அந்த முன்னணியின் பிரமுகரான எஸ்.சந்திரசேகரன் நேற்றிரவு தெரிவித்தார்.

மாவட்ட முதன்மை வேட்பாளரான பி.நடராசாவும் மற்றொரு வேட்பாளரான எஸ்.நடராசாவும் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர் என்றும்-

பெரும்பாலும் இன்று அவர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வர் என்றும் அவர் மேலும் கூறினார்.

தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்காக முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் அடுத்த வாரம் அளவில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

## மு.காங்கிரஸ் - பொ.ஐ.முன்னணி கிழக்கிலும் இணைந்து போட்டியிடும்

கொழும்பு,செப்ரெம்பர் 1

**அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப்புக்கும் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசிக்கும் இடையிலான லடாய்க்கு ஜனாதிபதி சந்திரிகா முற்றுப்புள்ளி வைத்துள்ளார். அமைச்சர் பௌசி மீது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி நேற்று அமைச்சர் அஷ்ரப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

இந்தச் சமரச நிலையைத் தொடர்ந்து அமைச்சர் அஷ்ரப் தமது ராஜினாமாவை விலக்கிக் கொண்டார். அத்தோடு கிழக்கின் மூன்று மாவட்டங்கள் உட்பட மொத்தம் பதினைந்து மாவட்டங்களில் பொ.ம.ஐ.முன்னணியுடன் இணைந்து அந்த முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிடவும் முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

அமைச்சர் அஷ்ரப்புக்கும் அமைச்சர் பௌசிக்கும் இடையில் தோன்றிய லடாயைத் தொடர்ந்து, அமைச்சர் அஷ்ரப் தமது பதவியை இராஜினாமாச் செய்ததோடு பொது

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் சிப்பாய் காயம்

கொழும்பு,செப்.1

கொழும்புத்துறைப் பகுதியில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார்த்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (இ-3-8)

## நகர சபை ஊழியர் மர்ம மரணம்

மீசாலை கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து துன்னாலைப் பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா யோகநாதன் (வயது 34) என்பவர் துன்னாலையில் அவரது வீட்டு முற்றத்தில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

சாவகச்சேரி நகரசபையில் சந்தை வரி வசூலிப்பாளராகவும் உழவு இயந்திர தற்காலிக சாரதியாகவும் பணிபுரிந்த இவர் சம்பள தினமான புதன் இரவு வெளியில் சென்றிருந்தார் என்றும் இவர் திரும்பி வருவதற்கு தாமதமாகியதால் இவரது மனைவி படுக்கைக்குச் சென்று விட்டதாகவும், காலை எழுந்து பார்த்தபோது வீட்டு முற்றத்தில் இவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117-31-109)

## 'ஜயா கோல்ட்' நோயாளர் கப்பல் திருமலையிலிருந்து வருகிறது

### இன்று நோயாளருடன் திரும்பிச் செல்லும்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வாடகைக்கு அமர்த்தியுள்ள 'ஜயா கோல்ட்' கப்பலின் முதலாவது நோயாளர் சேவை நேற்று ஆரம்பமானது.

திருமலையில் இருந்து நேற்றுப் புறப்பட்ட இந்தக்கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து ஒரு தொகுதி நோயாளரை ஏற்றிக் கொண்டு புறப்படும்.

ஏற்கனவே சேவையில் ஈடுபட்ட கப்பலில் இருந்து வசதிகளிலும் பார்க்கக் கூடுதலான வசதிகள் இந்தக் கப்பலில் செய்யப்பட்டுள்ளன.

கப்பலில் செல்லும் நோயாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்காக சிறிய சிகிச்சை நிலையம் ஒன்றும் இக்கப்பலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கூடுதல் நோயாளர்களை அழைத்துச் செல்லவும் வசதி செய்யப்பட்டுள்ளது. (இ-3-139)

## லங்கா முடித்த மூலம் ஒரு தொகுதி பயணிகளை அழைத்துச் செல்ல முயற்சி

யாழ்ப்பாணம்,செப்.1

திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் ஒரு தொகுதிப் பயணிகளை நாளை சனிக்கிழமை அழைத்துச்செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த முயற்சி பயன் அளிக்கும் பட்சத்தில் தொடர்பு சாதனங்கள் ஊடாக குறுகிய அறிவிப்பு விடப்படும் என்றும் -

அச்சமயம் சிங்கள மகாவித்தியாலயத்தில் பயண ஏற்பாடுகளுடன் சமூகமளிக்கத்தயாராக இருக்க வேண்டும் என்றும் - சிவில் நிர்வாக அலுவலகம் பயணிகளைக் கேட்டுள்ளது.

அதேசமயம் -

'லங்கா முடித்த' கப்பலில் செல்வதற்காக ஏற்கனவே பயணச்சீட்டு பெற்றுப் பின்னர் அதற்கான பணத்தை யாழ்.செயலகத்தில் மீளப் பெற்றவர்கள் அந்தப் பயணச்சீட்டின் போட்டோப் பிரதியுடன் சிங்கள மகா வித்தியாலயத்தில் சமுகம் தந்து புதிய பயணச்சீட்டைப்பெற்று லங்கா முடித்த கப்பலில் பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் -

லங்கா முடித்த கப்பல் சேவை இடம்பெறாவிட்டால் பயணச்சீட்டின் போட்டோ பிரதியைக் காண்பித்து 'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பலுக்கான

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கணனி இயக்குநர் தேவை

(Type setting) ரைப் செற்றிங் தெரிந்த பெண் தேவை. தகைமைகளைக் குறிப்பிட்டு 09.09.2000 க்குள் விண்ணப்பிக்கவும். (3 மைல் சுற்றாடலுக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

**கணேசன் கொமினிக்கேசன்ஸ்**

கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி.

தொலைபேசி: 021-2585, 021-3423 (77901)





ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக!

# இந்திரன் ஜீவல்லர்ஸ்

**சாவகச்சேரி**

அன்புடையீர்!

மேற்படி எமது ஸ்தாபனம் இன்று முதல் (01.09.2000) **கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு** என்னும் முகவரியில் செயற்படுகின்றது என்பதை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

இராசையா தெய்வேந்திரன்
(உரிமையாளர்)

('விஷ்ணு வீடியோ' அருகில்) (77809)


# மண மங்கல வாழ்த்து

திருநிறை செல்வன்
**கோபிநாத்**
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**துஷீத்தா**
அவர்களுக்கும்

இன்று (01.09.2000) வெள்ளிக்கிழமை மு.ப.7.20 முதல் 9.15 மணிவரை உள்ள சுப முகூர்த்தத்தில் வெள்ளவத்தை மியாமி மண்டபத்தில் நடைபெறும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் புதுத்தம்பதிகளை,

**'ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி**
**சால்பே தலைநிற்கும் சற்குணராய் - மேலான**
**ஒண் பொருளை ஏத்தி நிதம்உத்தமரே எஞ்ஞான்றும்**
**கண் போல் வாழ்வீர் கனிந்து' என்று நயினை**
**நாக பூசணி அம்பிகையின் அருளை வேண்டி**
**இதயபூர்வமாக வாழ்த்தி நிற்கின்றோம்.**

வாழ்க துஷீ, கோபி!

18, மணல்தரை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

செல்வி. நாகரெத்தினம் வேலுப்பிள்ளை
(முதன்மை ஆசிரியை, வர்த்தகம், யாழ். வலயம்)
வைத்திய கலாநிதி
திரு. திருமதி சத்திய சீலன் குடும்பம்
செல்வி. R. வைத்திலிங்கம் குடும்பம்
(ஆசிரியை)
திரு. க. ஜீவசீலன் குடும்பம் (ஆசிரியர்)
திரு. திருமதி. பிரதீபன் குடும்பம்.

(77848)

## NOTICE

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**FACULTY OF MEDICINE**

The Orientation programme of the new Batches (Academic year 1999 / 2000 & 2000 / 2001) will commence on 04 September 2000.

Academic Lectures will commence on 09 October 2000 for these batches.

Lectures for other batches (including 20th batch) will commence on 04 september 2000.

Registrar
2000.08.29 (C/12772)



தீத்தாவளவு பாற்கிழுவை

# ஞான பைரவர் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகமும்

நிகழும் விக்கிரம வருஷம் 16ஆம் திகதி (01.09.2000) வெள்ளிக்கிழமை

* காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாடு.
* 9.00 மணிக்கு சங்காபிஷேக அபிஷேகம்.
* 9.30 மணிக்கு விஷேட வசந்த மண்டபப் பூஜை.
* 10.00 மணிக்கு திருவீதி உலா.
* 12.00 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

** பிரதம குரு:
**சிவஸ்ரீ சே.பரமாநந்தக் குருமணி**

** சாதகர்:
**பிரம்மஸ்ரீ சு.லகுதரசர்மா - சாவகச்சேரி**
**பிரம்மஸ்ரீ நா.சபாரத்தின சர்மா - புத்தூர்**

இவர்களினால் மேற்படி நிகழ்வு நடத்தத் திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் சிவத்திரவியங்களாகிய பால், தயிர், இளநீர், சமித்து வகை, தானிய வகை, பூ, பூமாலை இவற்றினைத் தந்து பைரவப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(பழைய நேரப்படி யாவும் நிகழும்)

ஆலய தர்மகர்த்தா
முருகேசு இராமுப்பிள்ளை

மல்லாகம். (77893)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம ஆண்டு ஆவணி மாதம் 18 ஆம் நாள் (03.09.2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் 9.22 மணி (புதிய நேரம்) வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**தயாபரன் (கண்ணன்)**
(வருமான மேற்பார்வையாளர்,
வலி. கிழக்கு பிரதேசசபை,
நீர்வேலி)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**தமயந்தி (தமயா)**
அவர்களுக்கும்

வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்லாசிகளை நாடும்:

திரு. திருமதி
சு. முத்துக்குமாரசாமி ஐயா,
ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

திரு. திருமதி
சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் J.P
'அன்னை இல்லம்'
வன்னிச்சி அம்மன் கோவிலடி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

இரு வீட்டார் அழைப்பு

(C/12771)


அச்சுவேலியில் இன்று!

# மங்களகரமான திறப்பு விழா

# பி.ஜே.பர்னாண்டோ

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டு நிலையமும்

அன்புடையீர்!

இதோ உங்கள் சேவையில் முன்னணியில் நிற்கும் எமது நிறுவனத்தின் மற்றுமோர் கிளை நிறுவனம், இன்று அச்சுவேலியில் திறக்கப்படுகிறது.

வலிகாமம் கிழக்கு, அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள எம் வாடிக்கையாளர், நண்பர்கள் நலன்கருதி இன்று இந் நிறுவனத்தை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம் : அச்சுவேலி, சாங்கானை வீதி (பெற்றோல் செற் முன்பாக)**

**காலம் : யூபிலி ஆண்டு இன்று (01.09.2000) வெள்ளிக்கிழமை முற்பகல் 12.30 (புதிய நேரம்) க்கு வரும் சுபவேளையில் உயர் திரு. லயன் எஸ். சிறிகணேசன் (பரணி பார்மசி உரிமையாளர்) அவர்களால் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படும்.**

கிளைகள்:
1. பிரதான வீதி,
நெல்லியடி.
2. சங்கானை வீதி (பெற்றோல் செற் முன்பாக)
அச்சுவேலி.

- தங்கள் நல்வரவை நாடும்
லயன் A.ஜெயக்குமாரனும் பாரியாரும்.

பி.ஜே.பர்னாண்டோ,
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/12774)



# புலமைப்பரிசில் 2001

ஒவ்வொரு ஞாயிறும் நடைபெறும் பரீட்சைத் தொடரின் 4வது பரீட்சை எதிர்வரும் ஞாயிறு (நாளை மறுநாள்) எமது சகல பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும்.

**BOND**
**யாழ்நகர்**
(77891)



# நாகம்ஸ்
சுன்னாகம்

அஜித் - ஷாலினி
நடிப்பில் (77896)

**அமர்க்களம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)



# ராஜா
(யாழ்ப்பாணம்)

கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ், ஹீரா,
ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்

**பூவேலி**
காட்சிகள்: 10.30, 2:00
(புதிய நேரம்)

# பிரிவினையை தடுக்க மதத்தலைவர்கள் துணிவாகக் குரல் கொடுக்கவில்லை!

## உச்சி மாநாட்டில் கோபி அனான் உரை!!

நியூயோர்க்,செப்.1

பிரிவினைகளை தடுக்கவும் துன்புறுத்தல்களை நிறுத்தவும், வெறுப்பைத் தணிப்பதற்கும் மதத் தலைவர்கள் துணிவாக முன்வந்து குரல்கொடுக்க பல சந்தர்ப்பங்களில் தவறி விட்டனர் என்று ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் சுட்டிக் காட்டினார்.

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் உலக சமாதானத் திற்கான உச்சிமாநாட்டில் நிகழ்த்திய தொடக்கவுரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தனது உரையில் - மதவெறிக்கும், சகிப்புத்தன்மையின்மைக்கும் 21ஆம் நூற்றாண்டில் இடமில்லை என்று கூறிய அனான்.

மதவெறி உட்பட பல விதமான சமூக அநீதிகளுக்கு எதிராக மதத் தலைவர்கள் போதியளவு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் -

வரலாறுகள் முழுவதிலும் மதம் தேசியவாதத்தின் பிடியிலிருந்து வந்ததால், மோசமான வன்முறைகள கொழுந்து விட்டெரியக் காரணமாக இருந்துள்ளது என்றும தெரிவித்தார்.



கோபி அனான்

மதம் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் துணிச்சலோடு அவர்கள் செயற்பட்டிருந்தால் பல வேளைகளில் மக்களிடையேயான பிரிவினைகள் குறைந்திருக்கும .அவர்கள் அதனைச் செய்யத் தவறிவிட்டனர் என்றும் கோபி அனான் குற்றஞ்சாட்டினார். (ஓ)



சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றின் உட்புறங்களைப் படம் பிடிக்கும சிறியசாதனத்தை இஸ்ரேலிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. மாத்திரை வடிவில் இருக்கும் இந்தச் சாதனம் 'வீடியோ மாத்திரை' என்று அழைக்கப்படுகிறது. படத்தில் உள்ள பெண்ணின் கையிலிருப்பதே அந்தச் சாதனமாகும்.

## ராஜ்குமாரின் விடுதலையில் சிக்கல்:

# கர்நாடகாவிலிருந்து தமிழர்கள் பாதுகாப்புத் தேடி வெளியேறினர்!

ஈரோடு,செப்ரெம்பர் 1

**கர்நாடகா மற்றும் தமிழ்நாடு எல்லைப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் - குறிப்பாகப் பெண்கள் - அங்கிருந்து வெளியேறி, சத்தியமங்கலம், கோபிச்செட்டிப்பாளையம் போன்ற தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தங்கியுள்ளனர். கன்னட நடிகர் ராஜ்குமார் உள்ளிட்டோரை சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினாலேயே இவர்கள் குடிபெயர்ந்ததாகக் கூறப்படுகிறது.**

தமிழக எல்லையான தாளவாடி, திம்பம், ஆசனூர் ஆகிய பகுதிகளில் தமிழர்கள் மிகவும் குறைந்த அளவிலேயே வசிக்கின்றனர்.

அதேபோல் கொள்ளேகால், சாம்ராஜ்நகர் ஆகிய கர்நாடகப் பிரதேசங்களிலும் ஒரு சில தமிழ்க் குடும்பங்கள் உள்ளன.

இந்த இடங்களிலிருந்து சுமார் 500 குடும்பங்கள் தற்போது வெளியேறியுள்ளன.

1992-93, காலப்பகுதியில் காவிரி நதிப் பிரச்சினையால் ஏற்பட்ட கலவரத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட அனுபவத்தாலேயே இந்தக் குடும்பங்கள், தற்போது முன்னெச்சரிக்கையாக குடிபெயர்ந்து வருகின்றன.



இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில், மின் கட்டண உயர்வை கண்டித்து எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் வெடித்த வன்முறையில் கொளுத்தப்பட்ட பொலிஸ் ஜீப்பையும், வன்முறையாளர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல் நடைபெறுவதையும் படத்தில் காணலாம்.

கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரை கடத்திச் சென்றுள்ள வீரப்பன் அவர்களை விடுவிக்க கர்நாடகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வீரப்பனின் சகாக்கள் என்று சந்தேகிக்கப்படும் தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளான். இவர்களை விடுவிக்க கர்நாடக அரசு நடவடிக்கைகளை எடுத்திருந்த போதும், வீரப்பனால் கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரி ஒருவரின் ஆட்சேபனை மனுவால் தமிழர்களின் விடுதலையை உச்ச நீதிமன்றம் இடை நிறுத்தி வைத்துள்ளது.

இதனால் ராஜ்குமாரை வீரப்பன் விடுவிப்பதும் தாமதமாவதால் தம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தினாலேயே எல்லைப் பகுதித் தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதேசமயம், விவசாயக் கூலிகளாகவும், அலுவலக ஊழியர்களாகவும் கர்நாடகாவில் பணிபுரிந்த பெண்களில் 80 சதவீதமானவர்கள் தமிழ் நாட்டிற்குத் திரும்பி விட்டதாகக் கூறப்படுகிறது.

பொலீஸார் பாதுகாப்புத் தருவதாகக் கூறியும் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# காணாமல் போனதாக கருதப்பட்ட தமிழக மீனவர்கள் கரைசேர்ந்தனர்!

## தமிழ்ப் போராளிகள் காப்பாற்றினராம்!!

ராமேஸ்வரம்,செப்.1

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற போது காணாமல் போனதாகக் கருதப்பட்ட 4 தமிழக மீனவர்கள் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் உதவியால் மீண்டும் கரை திரும்பியுள்ளனர்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த செல்வராஜ் (24வயது), சேதுபாண்டி (25 வயது), ரமேஸ்(20வயது), ராமகிருஷ்ணன் (25வயது) ஆகியோர் கடந்த மாதம் 5ஆம் திகதி சிங்காரம் என்பவருக்குச் சொந்தமான படகில் இந்தியக் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர்.

மறுநாள் கரைக்குத் திரும்பியிருக்க வேண்டிய இவர்கள் சில நாள்கள் கழித்தும் ராமேஸ்வரம் வந்து சேரவில்லை. அதனால் படகு உரிமையாளரான சிங்காரம் பொலீஸிலும், மீன்பிடித்துறை அலுவலகத்திலும் முறையிட்டார்.

இதனையடுத்து காணாமல் போனவர்களை தேடும் பணி ஆரம்பித்த போதும், அவர்களைக் கண்டு பிடிக்க முடியாததால் தேடுதல் நிறுத்தப்பட்டது. காணாமல் போனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வேறொரு மீன்பிடிப்படகில் ராமேஸ்வரம் திரும்பியுள்ளனர்.

வேகமாக வீசிய காற்றினால் அலைக்கழிக்கப்பட்டு திசைதப்பிய தமது படகு பழுதாகி இலங்கைக் கரைக்கு அருகே தத்தளித்ததாகவும் -

அப்பகுதியில் அதிவேகப்படகு ஒன்றில் வந்த இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தம்மைக் காப்பாற்றி அழைத்துச் சென்று உணவளித்ததாகவும் தெரிவித்த அந்த மீனவர்கள்,

போராளிகளது படகில் ஏறி இந்தியக் கடல் எல்லைக்கு வந்து அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீன்பிடிப் படகின் மூலம் ராமேஸ்வரம் வந்து சேர்ந்ததாகக் கூறியுள்ளனர். (ஓ-6)

# தீயணைப்புப்படையின் இயலாமை; அம்பலப்படுத்தினார் ரஷ்ய வீரர்

மொஸ்கோ,செப்.1

ரஷ்யாவில் தீயணைப்புப் படையில் தேவையான உபகரணங்கள் இல்லை என்றும், தீயணைப்பு வீரர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படுவதில்லை என்றும், தீயணைப்பு வீரர் யோரி என்பவர் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சமீபத்தில் தொலைக்காட்சிக் கோபுரத்தில் ஏற்பட்ட தீயை அணைப்பதில் ரஷ்ய தீயணைப்புப் படையினர் திறமையாகச் செயல்பட முடியவில்லை என்று கூறிய யோரி, உயரமான கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களைக் கட்டுப்படுத்தத் தேவையான நவீன உபகரணங்கள் இல்லாததும், வீரர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்காததுமே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்தார்.

சில நாள்களுக்கு முன்னர் 'ஓட்டாகினோ' தொலைக்காட்சிக் கோபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழப்புகளும் பாரிய சேதங்களும் ஏற்பட்டிருந்தது தெரிந்ததே. (ஓ)

## செச்சினியத் தீவிரவாதிகள் உரிமைகோரினர்

மொஸ்கோ,செப்.1

ரஷ்யத் தொலைக்காட்சிக் கோபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கு செச்சினியத் தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர். இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்த உரிமைகோரலில், தீவைப்பு தமது தலைவரான சமில் பவம்யெவ் என்பவரின் உத்தரவின் பேரில் நிறைவேற்றப்பட்டதாகவும் கட்டடத்தில் விபத்தை ஏற்படுத்த அங்கு பணி புரியும் ஊழியர் ஒருவருக்கு 25 ஆயிரம் டொலர்கள் வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ரஷ்ய அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலில் விபத்து ஏற்பட்டு 118 பணியாளர்கள் உயிரிழக்கக் காரணம் தாங்களே என்று இதே இணையத் தளத்தில் செச்சினிய தீவிரவாதிகள் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## பதவியிலமர்ந்து 10 மாதங்களேயான

# இந்தோனேசிய அதிபர் மீது 2 ஊழல் குற்றச்சாட்டுக்கள்

ஜகார்த்தா,செப்.1

பதவியில் அமர்ந்து 10 மாதங்களே ஆகியுள்ள அதிபர் அப்துல் ரஹ்மான் வாகிட் மீது கூறப்பட்டுவரும் ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்த இந்தோனேசியா நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளதுடன விசாரணையை மேற்கொள்ள ஒரு குழுவையும் அமைத்துள்ளது.

அரசுக்குச சொந்தமான பணம் 40லட்சம் டொலர்கள் காணாமல் போனது மற்றும் புருனை சுல்தானிடமிருந்து 20லட்சம் டொலர்களை வாகிட் நன்கொடையாக பெற்றுக் கொண்டது தொடர்பாக இந்தோனேசியாவில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதை அடுத்தே நாடாளுமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வரவுசெலவு கணக்குகளை மேற்பார்வை செய்து வந்த தனிஉதவியாளர் ஒருவரே அரசுப்பணம் 40 லட்சம் டொலர்களை எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விட்டதாக அதிபர் வாகிட் கூறியுள்ளார்.

ஆனால் புருனை மன்னரிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் 20லட்சம் டொல்க்ள் குறித்து அவர் முழு விவரங்களையும் வெளியிட மறுத்து வருகிறார்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

## பிரிட்டனில் சிறுவர்கள் மீதான

# மதகுருமாரின் பாலியல் வல்லுறவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம்

லண்டன்,செப்.1

பிரிட்டனில் கத்தோலிக்க மதகுருமார் மற்றும் கன்னியாஸ்திரிகளால் சிறுவர்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டது தொடர்பாக கத்தோலிக்கத் தேவாலய சபை மன்னிப்புக் கோர வேண்டுமென வலியுறுத்தி ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

ஆன்மீக துஷ்பிரயோகங்களில் தப்பியோரின் அமைப்பு லண்டன் ஊடாக 'வெஸ்ட் மினிஸ்டர்' அதிமேற்றிராணியார் இல்லம் வரை இந்த ஊர்வலத்தை நடத்தியது.

ஊர்வலத்தின் முடிவில் கத்தோலிக்க மதகுருமார் மற்றும் கன்னியாஸ்திரிகளால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட ஆயிரத்து 300 சிறுவர்களின் பெயர்ப்பட்டியல் அதிமேற்றிராணியாரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து தேவாலயச் சபை மன்னிப்புக் கோர வேண்டும் என்று ஊர்வலத்தில் வந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஓ-8)

### விடுதலை

சியாராலியோனில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஐ.நா அமைதிப்படையின் 12 பிரிட்டிஷ்வீரர்களில் 5 பேரை விடுவித்தனர்.

# குடும்பத்தை விட இயக்கமே முக்கியம்: சிறையிலுள்ள தீவிரவாதி தெரிவிப்பு!

திருச்சி,செப்.1

குடும்பத்தை விட இயக்கம் தான் தனக்கு முக்கியம் என்று வீரப்பன் விடுவிக்கக் கோரியுள்ள 5 தமிழ்த் தீவிரவாதிகளில் ஒருவரான மணிகண்டன் கூறியுள்ளார்.

திருச்சி சிறைச்சாலையில் தனது சட்டத்தரணி டி.என்.கார்த்திகேயனிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

## கடல் எல்லையை வரையறுக்கும் பணி

கிழக்குச் சீன கடற்பகுதியில் ஜப்பானுடனான கடல் எல்லையை வரையறுக்கும் பணியை அடுத்த மாதம் தொடங்குவது என்று சீனா தீர்மானித்துள்ளது. சீனாவுக்கு விஜயம் செய்த ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் இதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினார். (ஓ-8)

தன்மீது உள்ள வழக்குகளை விலக்கிய தமிழக அரசுக்காக காட்டுக்குள் போவது உட்பட அனைத்து வகையிலும் உதவத் தயாராக இருப்பதாகவும், தன்னைக் காட்டுக்கு அனுப்பக் கூடாதென தனது தந்தை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது தனக்குத் தெரியாது என்றும் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

மணிகண்டனை விடுதலை செய்தால், அவரை காட்டுக்குள் அனுப்பக்கூடாதென்றும் -

காட்டுக்குள் செல்லும் வழியில் தனது மகனை பொலீஸ் சுட்டுக் கொல்லக் கூடும் என்றும் -

மணிகண்டனின் தந்தை சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளதும்,

அந்த மனுவை ஏற்ற நீதிமன்றம் விசாரணையை 1 வாரகாலம் தள்ளி வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கவை. (ஓ)

# மேசைவரிப் பந்தாட்ட சுற்றுப் போட்டி 2000

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை யானது 9 ஆவது தடவையாக யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஒற்றையர், இரட்டையர், கலப்பு இரட்டையர் ஆட்டங்கள் இவ்வருடம் 23-09-2000, 24-09-2000 திகதிகளில் நடத்தப்பட இருக்கின்றது.

விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் உடற்கல்வி அலகில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 20-09-2000

மேசைவரிப் பந்தாட்ட அணித் தலைவர்,
விளையாட்டு அவை,
யாழ். பல்கலைக்கழகம். (77874)

---

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி
அருள்மிகு ஸ்ரீ சங்கிலி வைரவர் ஆலய பிரதிஷ்டா

## மகா கும்பாபிஷேகம்
## 2000 - 09 - 01

வைரவ அடியார்களே!

மேற்படி ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் ஆவணித் திங்கள் 16 ஆம் நாள் (01- 09- 2000) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று இறுதி நாளன்று (1008) சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

அடியார்கள் கலந்து கொண்டு எம்பெருமான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

- ஆலய பரிபாலன சபை

விளம்பர உதவி:
**வீடியோ கலாமினி**
அச்சுவேலி. (77853)

---

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி

## அருள்மிகு ஸ்ரீ சங்கிலி வைரவர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

01 — 09 — 2000 ஆவணி மாதம் 16 ஆம் நாள் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 5 மணி முதல் யாக பூசை, மகா பூர்ணாகுதி - தீபாராதனை - ஸ்தூபி அபிஷேகம், காலை 6.00 மணி முதல் 7.00 மணிக்கு மகா கும்பாபிஷேகம்.

வைரவர் அடியார்கள் அனைவரும் வந்து வைரவரின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள்!

இந்நிகழ்வு சிறப்புற நடைபெற வாழ்த்துகிறார்கள்

**லாலா சோப் தொழிற்சாலையினர்**
அச்சுவேலி

நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு புதுப் பொலிவுடன் வந்துள்ளது.


லாலா நீலசோப், லாலா சன்சயின் சோப்

இதன் தரம் அறிய நீங்களும் ஒரு முறை பாவித்துப் பாருங்கள். (சி/12751)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 29-11-1987



உதிர்வு: 16 09-1996

**விஜேந்திரன் திவியா**

திதி: 01 — 09 2000

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டாய்
நீ எங்களை விட்டுப்பிரிந்து நான்காண்டு சென்றதம்மா!
உன் பிரிவில் நாம் என்றும் வாடுகிறோம்.
திவி உன்னைப் பிரிந்து வாடும் துயரம்
எத்தனை ஆண்டு சென்றாலும் மாறாதம்மா
உன் நினைவலைகள்.

க. நடராஜசிங்கம்
குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி:
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (71884)

---

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 1

துன்பங்கள் நீங்கி மக்கள் அமைதியான வாழ்வு வாழ வேண்டிப் பறாளை ஈஸ்வர விநாயகருக்கு பால் காவடி எடுக்கும் நிகழ்வு இன்று இடம்பெறும்.

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள பல ஆலயங்களில் இருந்தும் பால்காவடி எடுக்கப்பட்டு அனைவரும் சுழிபுரம் கம்பனை ஆலயத்தில் ஒன்று சேர்ந்து பறாளை விநாயகர் ஆலயத்தைச் சென்றடைவர். (க-28)

★ ★ ★

வண்ணார்பண்ணை மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொருதினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அஷ்டோத்திர சங்காபிஷேகமும் மறுநாள் திங்கட்கிழமை திருஊஞ்சல், தண்டிகை உற்சவத்துடன் அலங்கார உற்சவம் நிறைவுறும். (க-173)

★ ★ ★

ஆனைக்கோட்டை நாவலடி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாமுண்டீஸ்வரி சமேதர் சுவாமிகளுக்கு சங்காபிஷேகம் நடைபெறும். (க-173)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு, கேணியடிப்பதி ஸ்ரீ காளியம்மாள் கோயில் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கும் 9 04மணிக்கும் இடையில் நடைபெறும். (க-30-15)

★ ★ ★

கந்தரோடை வற்றாக்கைப்பதி அம்மன் ஆலயத்தில் இன்று அம்பிகா சமேத விஸ்வநாத பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெறும். (க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 1

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய மணவாளக் கோல விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (க-173)

★ ★ ★

நெல்லியடி, செப். 1

கற்கோவளம் அருள்மிகு கும்பிமுருகன் ஆலய தீர்த்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (க-109)

★ ★ ★

வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விநாயகர் சதுர்த்தி திருவிழா இடம்பெறும். (க-15-173)

★ ★ ★

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய மஹோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சங்காபிஷேகமும் நடைபெறும். (க-30)

★ ★ ★

அல்வாய், மாலு சந்நிதி ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய மணவாளக்கோலத்தை ஒட்டி சங்காபிஷேகமும் விசேட அபிஷேக ஆராதனையும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நண்பகல் அன்னதானமும் நடைபெறும். (3)

---

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 1

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக் கழகங்கள் ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4.00மணிக்கு— விக்ரமன்ஸ் வி.க.எதிர் சென். அன்ரனிஸ் வி.க. 'ஏ' அணி.

★ மாலை 5.00 மணிக்கு - நக்கீரன் வி. க. எதிர் கற். உதயதாரகை வி. க. (இ-8)

★ ★ ★

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் கால் இறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும் இடம்பெற வுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;

★ இன்று கலைவாணி வி. க. எதிர் உடுவில் உதயசூரியன் வி.க.

★ நாளை நவாலி தென்றல் வி. க. எதிர் பண்டத்தரிப்பு சாந்தை வி.க. (இ-8-86)

---

# இடமாற்றம்

நாச்சிமார் கோயிலடி,
அரசடிச்சந்தியில் இயங்கி வந்த
"ரட்ணாஸ் வைண்டிங்"
நிறுவனத்தின் இணை நிறுவனமான

## ரஜீவன் மோட்டோர்ஸ் & எலக்ரிக்கல்ஸ்

நிறுவனமானது இதுவரை இயங்கிவந்த கட்டடத்திற்கு முன்பாக இன்று (1-9-2000) வெள்ளிக்கிழமையிலிருந்து இயங்கி வருகிறது என்பதனை எமது இணைபிரியா வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (77875)

---

# உடன் விற்பனைக்கு

CANON NP120 PHOTO COPY MACHINE (கனொன் NP 120 போட்டோப் பிரதி இயந்திரங்கள்), LAMINATING MACHINE (அடையாள அட்டை கவரிடும் இயந்திரம்), YAMAHA GENERATOR (யமஹா ஜெனரேற்றர்) மற்றும் போட்டோ பிரதி இயந்திரத்திற்குரிய உதிரிப் பாகங்கள், ரோனர், றம், அடையாள அட்டை கவரிடுவதற்குரிய கவர்கள் மற்றும் பெரிய சிறிய கவர்கள் என்பன உடன் மலிவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
87, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) (77887)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. அ. தனபாலசிங்கம் அவர்களது
சகோதரர்

## அருணாசலம் திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(சி/12780) யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

---

யாழ். லயன்ஸ் கழகம்
நடத்தும்
இலவச

## மருத்துவப் பரிசோதனைகளும் மருந்து நிவாரணமும் நோய்த் தடுப்பு விளக்கங்களும்

காலம்:- 02- 09- 2000
இடம்:- ஆறுகால்மடம், அறிவொளி சனசமூக நிலையம்
நேரம்:- காலை 9. 30 மணி

மருத்துவப் பரிசோதகர்:- Dr. K. குலநாயகம் (யாழ். போதனா வைத்தியசாலை)
கண் பரிசோதகர்:- P. J. பெர்னாண்டோ ஸ்தாபனத்தார்
நோய்த் தடுப்பு விளக்கமளிப்பவர்:- Dr. லயன் S. S. அருளானந்தம்

(சி/12775) — செயலாளர்

# உதயன்

## அவசரகாலத் தேர்தல்!

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை, அந்தப் பதவியில் அமர்பவருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்குகிறது. சிறப்புரிமை, விலக்குரிமை என்ற விசேட வசதிகளின் கீழ் நிறைவேற்று ஜனாதிபதி எதனையும் செய்யலாம். ஒவ்வாத, நீதியற்ற நடவடிக்கை எதனையும் மேற்கொண்டாலும் கூட எவருக்கும் பதில் சொல்லவோ அல்லது பொறுப்புக் கூறவோ வேண்டிய தேவை அவருக்கு இல்லை. ஏன், நீதிமன்றத் தீர்ப்பைக் கூட நடைமுறைப்படுத்தாமல் நிறுத்துமாறு உத்தரவிடலாம்.

சூரியகந்தவில் காணமற்போனவர்கள் குறித்த வழக்கில் விடுதலை செய்யப்பட்ட பிரிகேடியர் பரிலியனகே தொடர்ந்த அடிப்படை உரிமைகள் வழக்கின் தீர்ப்பை - அவரை மீண்டும் இராணுவத்தில் சேர்த்து உரிய பதவி உயர்வை வழங்க வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை - மழுங்கடிக்கச் செய்யும் வகையில், அவருக்குப் பதவி உயர்வு வழங்க முடியாது என்று ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர, தான் நினைத்த எதனையும் செய்யவல்ல அதிகாரம் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உண்டு என்று கூறப்படுவது வழக்கம். பல சந்தர்ப்பங்களில் அது சரியாகவே இருந்திருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் போன்று, ஆட்சியில் உள்ளவர்கள் நினைத்ததைச் சாதிக்க வகை செய்வதற்கு அதிகாரம் அளிக்கும் பெயர் பெற்ற சட்டம் ஒன்றும் உள்ளது. அதுதான் அவசரகாலச் சட்டம்!

இனக்கலவரங்கள், குழப்பங்கள் உண்டாகும் போது அவற்றைத் தணிப்பதற்கென்றே, "ஆசை அருமையாய்" பயன்படுத்துவதற்கென்றே ஆரம்பத்தில் பொதுசன பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின் கீழேயே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுவதுண்டு.

ஆனால் இலங்கை வாழ் மக்கள் நீண்ட காலமாக - பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாக - சிறு சிறு இடைவெளிகள் தவிர, அவசரகாலச் சட்டத்திற்கு உட்பட்டே வாழ நேர்ந்துள்ளது. ஆட்சியாளர்கள் மக்கள் நலன்களுக்கு முரணாக - விரோதமாக செயற்படுவதை மறைக்கும் தடித்த திரையாக அவசரகாலச் சட்டம் விளங்குகிறது; பயன்படுத்தப்படுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் தாங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு - தமது சொந்த விருப்பத்துக்கு ஏற்ப நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு - சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடைபெற வேண்டும்.

ஆனால் இம்முறை தேர்தலை அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடத்துவதற்கு அரசு கங்கணம் கட்டியுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டதால் அவசரகாலச் சட்டத்தை இந்த மாதம் சபையில் நிறைவேற்ற முடியாமற்போகும். அதன் விளைவாக, செப்ரெம்பர் 8ஆம் திகதிக்குப் பின்னர் அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிடும். அதன் பின்னர் கட்டப்பட்ட உணர்வு எதுவுமற்றவர்களாகத் தாம் தேர்தலில் பங்கு கொள்ள வசதி கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் அரசாங்கம் அதற்கு அனுமதிப்பதாக இல்லை. சட்டத்தில் உள்ள ஓட்டைகளைக் கண்டு பிடித்து, அவற்றுக்குள் புகுந்து, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க அரசாங்கம் முனைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிறைவேற்று ஜனாதிபதியான சந்திரிகா, நாட்டின் பாதுகாப்பு நிலைமையைக் காரணம் காட்டி, அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரகடனத்தை வெளியிடுவதற்கு முடிவாகியுள்ளது.

அவசரகாலச் சட்டம் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கண்ணுக்குப் புலப்படாத அடிமைத்தனத்தைத் திணிப்பதோடு மட்டுமன்றி அவர்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகளையும் பட்டவர்த்தனமாகப் பறிக்கும் தன்மை கொண்டுள்ளது. தேர்தல் சமயத்திலும் பத்திரிகைச் செய்தித் தணிக்கை அமுலில் உள்ளது அதனை முழு அளவில் ஊர்ஜிதம் செய்கிறது!

மொத்தத்தில், இலங்கை மக்கள் எல்லோருமே ஒரு வகையில் விலங்கிடப்பட்ட நிலையில் இருந்து கொண்டே தமது பெறுமதிமிக்க வாக்குரிமையைப் பயன்படுத்தப் போகிறார்கள்.

# இலங்கை தேர்தல் வன்செயல்கள்

# அமெரிக்கப் பிரஜைகளை எச்சரிக்கிறது வாஷிங்ரன்!

வாஷிங்டன்,செப்ரெம்பர் 1

**மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும் இலங்கையிலுள்ள தனது நாட்டுப் பிரஜைகளை அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.**

கடந்த தேர்தல் சமயத்தில் கொலைகள், தீ வைப்புக்கள், தாக்குதல்கள் போன்ற வன்முறைகள் இடம்பெற்றதைச் சுட்டிக்காட்டியிருக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவை தொடர்பாக எச்சரிக்கையாக இருக்குமாறு தனது பிரஜைகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

தேர்தல் வன்செயல்களைச் சகல கட்சிகளும் கண்டித்துள்ள போதும் எதிர்வரும் தேர்தலில் அத்தகைய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக் கூடுமெனவும் குறிப்பிட்டிருக்கும் இராஜாங்கத் திணைக்களம், அரசியல் கூட்டங்கள், அரசாங்க, இராணுவ நிலைகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு தனது பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இலங்கையில் எதிரணியைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட ஒருவாரத்தின் பின்னர் இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை வெளியாகியுள்ளது. எதிரணி ஆதரவாளர் சுடப்பட்ட சம்பவமானது தேர்தல் வன்செயல்கள் மேலும் அதிகரிக்கலாம் என்ற பீதியை அதிகரித்துள்ளது. (ஐ-6)



புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல கடந்த செவ்வாயன்று அலரிமாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## பஸ்தரிப்பு நிலையம் அமைப்பு

சண்டிலிப்பாய்,செப்.1

பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் பிரயாணிகளின் நலன்கருதி புதிய பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை நிறுவி வருகின்றது. சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் இந்த பஸ்தரிப்பு நிலையம் கிராம மக்களின் நிதி உதவி மூலம் அமைக்கப்பட்டு வருவதாக மேற்படி சங்கத் தலைவர் க.கிருஷ்ணலிங்கம் தெரிவித்தார். (க-135)

# தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாலேயே நாடு சுடுகாடாக மாறி வருகிறது

## சோஷலிச சமத்துவக் கட்சிச் செயலாளர் கூறுகிறார்

"தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதனாலேயே இன்று நாடு சுடுகாட்டை நோக்கிச் செல்கின்றது. இந்த நிலைமை மேலும் தொடரக்கூடாது" என சோஷலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் சோஷலிச சமத்துவக் கட்சி கத்தரிக்கோல் சின்னத்தில் மேல் மாகாண சபைக்குட்பட்ட பகுதியில் போட்டியிடவுள்ளது. இது தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை கோட்டை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றபோதே விஜே டயஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் வாழும் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும் உரிமைகளை வென்றெடுக்கவும் தொடரும் யுத்தத்துக்கு முடிவொன்றைக் காணவும் ஸ்ரீலங்கா, ஈழம் சோஷலிச குடியரசை நிறுவ மக்களின் ஆணையைக் கோரவுள்ளோம்.

இலங்கையில் இதுவரை காலமும் முதலாளித்துவ சாக்கடை அரசியலே மக்களை ஆட்சி செய்துள்ளது. இதனால் இலங்கையின் அரசியல் வரலாறு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு யுத்தமொன்றுக்கும் இட்டுச் சென்றுள்ளது.

இன ஐக்கியத்துக்கு எதிரான செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளும் சுயநலம் கருதி சந்தர்ப்பவாத அரசியலை நடத்துகின்றன. இடதுசாரிகளும் முதலாளித்துவப் போக்குக்கு ஒத்துழைப்புக் கொடுத்துள்ளனர். இதனால் இடதுசாரி சித்தாந்தம் பிழையான பாதையில் போய்விட்டது. இதனாலேயே பொது மக்களின் ஜனநாயக உரிமைகளை கட்டிக்காக்க முடியாமலுள்ளது.

வேலை இல்லாத் திண்டாட்டம், பணவீக்கம், வாழ்க்கைச் செலவு அதிகரித்தல், விலைவாசி, கல்வி, சுகாதார வீழ்ச்சி, வன்முறைகள் போன்ற சமூகப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இவற்றை இல்லாதொழித்து சகலருக்கும் சமத்துவமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க சோஷலிச சமத்துவக் கட்சி உறுதிபூண்டுள்ளது.

இந்த அரசாங்கம் இராணுவ, அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்து பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குகின்றது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட புதிய அரசமைப்பு மக்களின் எழுச்சி காரணமாக தோல்வியுற்றுள்ளது. மக்கள் மதிக்காத அரசியலுக்கு கிடைத்த பலத்த அடியே இது. இதற்குத் துணைபோனவர்களுக்கும் இதே நிலைமைதான் எதிர்காலத்தில் கிடைக்கும். யுத்தம் தொடரும் பட்சத்தில் மக்களை அழித்தொழிக்கவே முடியும். இதன் மூலம் எதைச் சாதிக்க முடியும்? தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதனாலேயே இன்று நாடு சுடுகாட்டை நோக்கிச் செல்கின்றது. இந்த நிலைமை மேலும் தொடரக் கூடாது - என்றார். (க-6)

# "அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதாவோரை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ஆஜராக்கமுடியாது"

## வவுனியா நீதிவான் அறிவிப்பு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற சந்தேக நபர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் ஆஜர் செய்வது சட்டவிதி முறைகளுக்கு முரணானது என வவுனியா கிளர்ச்சித் தடுப்புப் பொலீஸாருக்கு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுகின்றவர்கள் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுத் தடுப்புக் காவலுக்கான உத்தரவு பெறப்பட வேண்டும் எனவும் -

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுகின்ற நபர்கள் தகுதி வாய்ந்த பொலீஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் மூலமாகவே ஆஜர் செய்யப்பட வேண்டும் எனவும் -

நீதிவான் அறிவித்துள்ளார்.

நீதிவானின் அறிவிப்பை அடுத்து இவ்வாறான விசாரணைகளின் வழக்குகளுக்கு ஏற்ப, பொலீஸ் இன்ஸ்பெக்ரர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலையில் உள்ள பொலீஸ் அதிகாரிகள் நீதிமன்றில் சமுகமளித்து வருகின்றனர். (க-6)

**உதயவாக்கு**

**நிறை கண்டால் போற்று; குறை கண்டால் ஒன்றும் கூறாதே.**

- *இயேசு*

**நாளை**

**ஆவணி 17**

**சனிக்கிழமை**

*திதி:* சதுர்த்தி

முற்பகல் 11.30 வரை

*நட்சத்திரம்:* சித்திரை

பிற்பகல் 4.44 வரை

ரிஷி பஞ்சமி தினம்

*சுபநேரம்:* 3.05 - 4.35

*ராகுகாலம்:* 9.05 - 10.35

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஹிஸ்புல்லாவுடன் பௌசி சந்திப்பு

முஸ்லிம் காங்கிரஸின் பதில்ச் செயலாளரும் பிரதி அமைச்சருமான ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, கடந்த திங்கட்கிழமை இரவு அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் நடவடிக்கைகள் குறித்து பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் பதவியில் இருந்து திடீரென ராஜினாமா செய்யுமாறு அஷ்ரப் உத்தரவிட்டது தொடர்பாக ஹிஸ்புல்லா மிகவும் வேதனையுடன் இருப்பதாகவும் - முஸ்லிம் காங்கிரஸ் அல்லது தேசிய ஐக்கிய முன்னணியின் கீழ் போட்டியிடாவிட்டால் தாமும் வேறு சில முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கீழ் போட்டியிடத் தயாராக உள்ளதாக அப்பேச்சுக்களின்போது ஹிஸ்புல்லா கூறியதாகவும் -

அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (க-186)

## சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.1

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடந்த 97ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து பழைய சம்பளப் புள்ளியில் ஓய்வு பெற்ற ஊழியர்கள் மற்றும் மரணமடைந்த ஊழியர்களின் உரித்துடையவர்களை இன்று வெள்ளிக்கிழமை யாழ். கன்னாதிட்டி வீதியில் உள்ள சிமெந்துக் கூட்டுத்தாபனக் காரியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## இரங்கல் செய்தி

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரும் மூத்த தொழிற்சங்கவாதியுமான எம்.ஜி.மெண்டிஸின் மறைவு குறித்து சமூக ஜனநாயகமன்றம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

மெண்டிஸின் மறைவு குறித்து இந்த அமைப்பு வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெண்டிஸ் வழிநடத்திய கொள்கை வழி நின்று இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தையும் நமது நாட்டுத் தேசிய இனங்களின் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்குப் பாடுபடுவோம் என்றும் அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சமயஅறிவுப்போட்டி பரிசளிப்பு விழா

நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை ஒட்டி தட்டாதெரு, கலாஜோதி இளைஞர் ஒன்றியம் நடத்திய சமய அறிவுப்போட்டியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

ஒன்றியத்தின் தலைவர் மு.நந்தகோபால் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகர சபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர். (க)

## விதை நெல் விநியோகம்

வலி.தெற்கு,செப்.1

கந்தரோடை விவசாயிகளுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால் இவ்வருட காலபோக நெற்செய்கைக்கு வேண்டிய நல்லின நெல் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

கந்தரோடை விவசாயிகள் கழகத்தின் ஊடாக 54 விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கப்பட்டது.

கந்தரோடை கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து விதை நெல் விநியோகம் செய்யப்பட்டது. (ஐ-152)

## கல்விக்கல்லூரிக்கு நூல்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்றுவரும் பயிற்சியாளர்களுக்கு வேண்டிய நூல்கள் இல்லாதிருப்பதால் நூல்களைத் திரட்டும் நோக்குடன் கல்லூரியில் நாளை முதல் 6 ஆம் திகதிவரை நூலக வாரம் நடைபெறவுள்ளது.

இவ்வாரத்தில் பயிற்சியாளர்கள் பல அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களை நேரடியாகச் சந்தித்து நூல் சேகரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் கொழும்பில் இருந்தோ அல்லது வெளி இடங்களில் இருந்தோ வேண்டிய நூல்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதால் இவ்வாறு நூல்கள் சேகரிக்கப்பட இருப்பதாகக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-10-73-152)

## விஞ்ஞான கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தாய் விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஓகஸ்ட் மாதக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறை மண்டபத்தில் நடைபெற்றது.

சித்தமருத்துவ கலாநிதி திரு. நா.வர்ணகுலேந்திரன் 'மூலிகை மருத்துவத்தில் அண்மைக்கால முன்னேற்றங்கள்' எனும் பொருளில் கருத்துரை வழங்கினார். (க-173)

# ஆனைமுகனின் அருள் பெற்றுய்ந்திட
# ஆவணிச் சதுர்த்தியே சிறந்த விரதம்

## இன்று விநாயகர் சதுர்த்தி விரத நன்னாள்

விநாயகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் ஆவணிச்சதுர்த்தி விரதம் இன்றாகும்.

ஆவணிச் சதுர்த்தி என்பது ஆவணி மாதத்துச் சுக்கில பட்சத்தில் வரும் சதுர்த்தியில் - வளர்பிறை நான்காம் நாள் - அனுட்டிக்கும் விநாயக சதுர்த்தி விரதமாகும்.

ஆவணிச் சதுர்த்தியில் அதிகாலையில் எழுந்து நீராடிச் சங்கற்பித்துக் கும்பம் வைத்து விநாயகப் பெருமானை மனதில் எண்ணி சாம்பிராணித் தூபம் காட்டி, கற்பூர தீபம் ஏற்றி வழிபாடு தொடங்கலாம். பின்பு சந்திரனையும் பூசித்து விநாயகர் பூஜையை முடிக்கலாம். ஆனால அன்றிரவு சந்திரனைப் பார்க்கவே கூடாது. சதுர்த்தியில் சந்திரனைப் பார்த்தால் அவமானம் ஏற்பட இடமுண்டு என்று ஆன்றோர் கூறுவது உண்டு.

இந்த விரதம் மிகவும் மகிமை பொருந்தியதும் விக்கினங்களையெல்லாம் நீக்கியருளுகின்ற ஸ்ரீ விக்கினேஸ்வரப் பெருமானுக்கு விசேட பூஜை செய்து - அவல், மோதகம், எள்ளுருண்டை, வடை, நெய்வேத்தியம் வைத்து - நிவேதித்துக் கொள்ளல்வேண்டும்.

இந்த விநாயகர் சதுர்த்தியில் - பசுவின் சாணத்தைவிட - புற்று மண்ணால் செய்த பிள்ளையாரே பூசைக்குகந்தது. இன்று மதியம் மட்டும் அமுது உண்டு இரவில் பால் பழம் உண்ணுதல் சிறந்தது.

இனி விநாயகப் பெருமானின் திருவருட் தத்துவத்தைச் சிறிது சிந்திப்போம்.

### ஞானக்கதிர்

விநாயகப் பெருமான் சிவபெருமானுடைய மூத்த திருக்குமாரர். சிவனும் விநாயகரும் ஒருவரே. விநாயக மூர்த்தம் கஜமுகன் என்னும் அசுரனைச் சங்கரித்து அருளி, அவனாலே தேவர்களுக்கு வந்த துன்பங்களை நீக்கியருளுதற்கும் அடியார்களுக்குப் போக மோட்சங்களைக் கொடுத்தற்கும் எழுந்த மூர்த்தமாம். இவர் திருவருளே திருமேனியாக உள்ளவர். ஆன்மாவின் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானம் உணர வகை செய்பவர். யானை முகமும் பூத வயிறும் தேவ சரீரமும் ஒற்றைக் கொம்பும் மூன்று திருக்கண்களும் இரு செவிகளும் அங்குசம், ஒடித்த கொம்பு என்பவற்றை வலத்திருக்கரங்களிலும் பாசம், மோதகம் என்பவற்றை இடத்திருக்கரங்களிலும் தாங்கியவரும், துதிக்கையும் சேர்த்து ஐந்துகரங்களும் கொண்டிருந்து அனுக்கிரகிப்பார்.



விநாயகக் கடவுள் ஏகதத்தராயிருப்பது பரஞானபதி என்பதை அறிவித்தற்காகும். மூன்று திருக்கண் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் நிலைக்களமாய் நின்று செலுத்துகின்றவர் தாமென்பதையும் இரு செவிகள் எல்லா அறிவும் எல்லா வல்லமையும் உடையவர் தாமென்பதையும் திருவடிகள் ஞானசக்தி கிரியாசக்தியையும் குறிப்பதாகும். பெருவயிறு எல்லா உலகமும் உயிர்களும் தம்முள் அடக்கம் என்பதைக் காட்டும். கஜமுகனைச் சங்காரம் செய்வதற்காக முறித்த ஒரு கொம்பை ஏந்தியது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் நீக்குபவர் தாமென்பதையும் குறித்தற்காம். ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவ மலமாகிய யானையை பாசத்தாற்கட்டி அங்குசத்தால் அடக்கி மறைத்தெலெனும் கிருத்தியத்தைச் செய்பவர் தாமென்பதை உணர்த்துவதற்காகப் பாசாங்குசங்களை ஏந்தினார். கஜமுகாசுரனோடு செய்த யுத்தத்திலே பரம கருணாநிதியாகிய கணேச மூர்த்தியானவர் ஆணவ ரூபமாகிய கஜமுகாசுரனுடைய சேனைகளை பாசத்தாற்கட்டி கணிச்சியாலடக்கி அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளியாய் வர நீங்காத ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனாக்கி வாகனமாம் பேற்றை அளித்து அடிமை கொண்டருளினார்.

இதனால் ஆணவமாகிய யானையை அடக்கி ஆன்மாவை ஆட்கொண்டருளுபவர் விநாயகர் என்பது இனிது விளங்கும். பாசத்தையும் அங்குசத்தையும் ஏந்தியது தம்மைக் கட்டுபவரும் செலுத்துபவரும் பிறிதொருவருமில்லை என்பதை உணர்த்தும் அறிகுறியாம்.

சிவபெருமான் தாம் பஞ்சகிருத்திய பதி என்பதைத் தமது திருமுகங்கள் ஐந்தினாலும் உணர்த்துவது போல விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து திருக்கரங்களாலும் உணர்த்துகின்றார்.

*"ஐந்து கரத்தனை*
*ஆனை முகத்தனை*
*இந்தினிளம்பிறை*
*போலுமெயிற்றனை*
*நந்தி மகன்றனை*
*ஞானக்கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி*
*போற்றுகின்றேனே"*

தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாத தன்மையால் அதாவது வேறு நாயகர் இல்லை என்றபடியால் விநாயகர் என்றும் கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குபவராதலால் கணபதி என்றும் விக்கினங்கள் போக்குகின்ற ஈஸ்வரன் ஆதலால் விக்கினேஸ்வரன் என்றும் இன்னோரன்ன பல பெயர்களால் அழைக்கப்படுபவர் ஆனைமுகக் கடவுளான பிள்ளையாராவார்.

உலகைக் காக்கும் பரம்பொருளான பரமேஸ்வரன் திரிபுர தகனத்தின்போது கணபதியைக் கருத்திற் கொள்ளாத காரணத்தால் தேரின் அச்சு முறிந்தது என்று புராணம் கூறுகிறது.

கலியுக வரதனான கந்தப்பெருமான் வள்ளியை ஆட்கொள்ளப் புறப்பட்டபோது விநாயகரை நினையாது சென்றதால் காரியம் கைகூடவில்லை என்றும் பின்பு விநாயகர் மூலமாகத்தான் அவளைக் கைபிடித்தார் என்றும் புராண வாயிலாக அறியக் கிடக்கிறது. ஓங்கார மூர்த்தியான விநாயகரை வழிபட்டால் ஆங்காரம் நீங்கும் என்பது முன்னோர் கருத்து.

*"விநாயகனே வெவ்வினையை*
*வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை*
*தணிவிப்பான்*
*விநாயகனே விண்ணுக்கும்*
*மண்ணுக்கும் நாதனுமாம்*
*தன்மையினாற் கண்ணிற்*
*பணிமின் கனிந்து"*

எந்தக் காரியம் தொடங்கினாலும் அந்தக் காரியம் குறைவின்றி நிறைவுபெற முதற்கண் விநாயகப் பெருமானை வணங்குவது சைவ மரபு. ஆலயங்களில் தானும் முதலில் பிள்ளையாருக்குப் பூஜை செய்த பின்பே மூலஸ்தானத்துக்குப் பூஜை நிகழும். நாம் எதையாவது எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி போடுவது ஆதிகாலந் தொட்டு நிலவி வருகின்ற ஒரு வழக்கமாகும்.

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்

திருமணம் முதலான நற்கருமங்கள் ஆரம்பிக்கும் போது ஆனைமுகனை வணங்கியே துவக்கப்படும். புலவர்கள் பாடல்களை யாக்கும் போது முதற்பாடுவது காப்புச் செய்யுளாகும். அந்தக் காப்புச் செய்யுள் கரிமுகக் கடவுளுக்குரியது. ஒளவையார் தமது மூதுரையின் முதற் பாடலிலேயே மூஷிகவாகனனைப் பாடுகின்றார். அழகிய நறுமலர்கள் கொண்டு அர்ச்சித்து ஒவ்வொருநாளும் தப்பாமல் வழிபட்டால் அவர்களுக்கு நல்வாக்கு, செல்வாக்கு, நோயின்றிய வாழ்க்கை முதலானவை கிட்டும் என்பது அவரது கருத்தாகும்.

*"வாக்குண்டாம் நல்ல*
*மனமுண்டாம் மாமலராள்*
*நோக்குண்டாம் மேனி*
*நுடங் காது - பூக்கொண்டு*
*துப்பார் திருமேனி*
*தும்பிக் கையான் பாதம்*
*தப்பாமற் சார்வார் தமக்கு"*

ஒரு முறை ஒளவையார் அவசரம் அவசரமாக விநாயகருக்குப் பூஜை செய்தார். அது கண்ட விநாயகர், "ஒளவையே! என்ன அவசரம்?" என வினாவினார். அதற்கு ஒளவைப் பிராட்டியார், "கைலாசம் போகவேண்டும்; அதுதான் இன்று அவசர அவசரமாகப் பூஜை செய்கின்றேன். பொறுத்தருள வேண்டும்" என்றார். அதற்கு விநாயகர், "நானே உன்னைக் கைலாசத்திற் சேர்க்கின்றேன். கவலையொழிக" என்று கூறி ஆறுதலாகப் பூசை செய்யச் சொன்னார். பின்பு துதிக்கையினாலேயே அவரைத் தூக்கி கைலாசத்தில் விட்டார் என்பது வரலாறு.

இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதக் கதையை வியாச பகவான் சொல்ல விநாயகப்பெருமான் எழுதினார் என்று புராணம் கூறுகிறது. விநாயகரை வழிபடுவதற்குச் சிரமம் ஏதுமில்லை. "மண்ணினாலே செய்யினும் மஞ்சளிலே செய்யினும் அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்" என்று புலவர் ஒருவர் பாடினார்.

சாணகத்தை எடுத்து உருட்டி அறுகம் புல்லை வைத்துவிட்டால் போதும்; பிள்ளையாரை வணங்கி விடலாம். பிள்ளையாரை வணங்கி அருள் பெற்றோர் அநேகர். தேவர்களின் தலைவன் தேவேந்திரன் சிவ பூசைக்குப் பூ இல்லாது கஷ்டப்பட்டான். தனது குறையைப் போக்கும்படி விநாயகரை வேண்ட, அவர் அகத்தியரின் கமண்டலத்திலிருந்து தண்ணீரைக் கவிழ்த்துவிட்டார்.

கரிமுகன், காகமாகப் பறந்து சென்று தட்டிவிட்டபடியால் அது 'காவிரி' என்ற பெயரோடு பெருக்கெடுத்து ஆறாகப் பாய்ந்தது. இந்திரன் குறையும் தீர்ந்தது.

கணபதிப் பெருமான் ஆறாதாரங்களிலொன்றாகிய மூலாதாரத்தில் எழுந்தருளியிருக்கின்றார். முட்டியாகப் பிடித்த இரு கரங்களினாலும் சிரசிற் குட்டும் பொழுது மத்தகத்திலிருக்கும் அமிர்தமானது சுழுமுனா நாடி மார்க்கமாக மூலாதாரத்தில் எழுந்தருளியிருக்கும் கணேசரை அடைந்து அபிஷேகமாக அவர் உவந்து திருவருள் செய்வார் என்பதே இதன் பாவனையாகும். மும்முறை குட்டுவது மும்மல நீக்கத்தின் பொருட்டாகும்.

விநாயகர் சந்நிதானத்தில் மும்முறை தாழ்ந்தெழுதல், 'நான், எனது' என்னும் அகங்கார மமகாரங்கள் நீங்கித் திருவருள் வசப்பட்டு நிற்பேன் என்ற உண்மையாகும். செல்வச் சிறப்பும் கல்விச் செல்வமும் வளமான வாழ்வும் பெற ஸ்ரீ விநாயகப் பெருமானை வழிபடல்வேண்டும். எமது உள்ளத்திலே கருணை நிறைந்து விளங்கவும் தீயன விலகவும் கணபதியைக் கைதொழவேண்டும்.

*"திருவுங் கல்வியும்*
*சீருந் தழைக்கவும்*
*கருணை பூக்கவும்*
*தீமையைக் காய்க்கவும்*
*பருவமாய் நமதுள்ளம்*
*பழுக்கவும்*
*பெருவு மாழத்துப்*
*பிள்ளையைப் பேணுவாம்"*

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஒளவைப் பாட்டியார். மனிதப் பிறவி கிடைத்தற்கரிய ஒரு பிறவியாகும். ஆகவே இந்தப் பிறவியில் தான் இனிமேலும் பிறக்காமலிருக்க ஆவன செய்யலாம். இந்த மண்ணுலகத்திலே பிறக்கின்ற நாம் பிறவிப்பிணி நீங்க விநாயகப் பெருமான் உதித்த தினமாகிய இந்த ஆவணி மாத விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து அந்த விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்வோமாக. ★

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 29, 30ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/139691/A | 513/139691/B |
| 513/155097/A | 513/155253/A |
| 513/155379/A | 513/155379/B |
| 513/157774/A | 513/157835/A |
| 513/157921/A | |

### யாழ்ப்பாணம்

511/156855/A

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/145728/A | 511/145728/B |
| 511/145728/C | 511/145728/D |
| 511/149007/E | 511/149047/A |
| 511/149047/B | 511/149047/C |
| 511/149077/A | 511/149077/B |
| 511/149077/C | 511/149077/D |
| 511/149626/A | 511/149643/A |
| 511/149650/A | 511/149662/A |
| 511/149664/A | 511/149673/A |
| 511/149673/B | 511/149756/A |
| 511/149756/B | 511/149756/C |
| 511/154289/A | 511/154289/B |
| 511/154322/A | 511/154326/A |
| 511/154332/A | 511/154332/B |
| 511/154332/C | 511/154359/A |
| 511/154385/A | 511/154385/B |
| 511/154477/A | 511/154477/B |
| 511/154521/A | 511/154521/B |
| 511/154528/A | 511/154537/A |
| 511/154569/A | 511/154569/B |
| 511/156810/A | 511/156810/B |
| 511/156810/C | 511/156810/D |
| 511/159705/A | |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/144861/A | 511/144861/B |
| 511/144868/A | 511/144868/B |
| 511/144868/C | 511/144869/A |
| 511/144871/A | 511/144871/B |
| 511/144871/C | 511/144874/A |
| 511/144874/B | 511/145010/A |
| 511/145098/A | 511/145672/A |
| 511/156706/A | 511/157001/A |
| 511/157002/A | 511/157003/A |
| 511/157012/A | 511/157198/A |
| 511/157198/B | 511/157632/A |
| 513/155174/A | 513/155176/A |
| 513/155336/A | 513/155336/B |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/150422/A | 513/152192/A |
| 513/152192/B | 513/155118/B |
| 513/155119/A | 513/155286/A |
| 513/155383/A | 513/156047/A |
| 513/156047/B | 513/156047/C |
| 513/156062/A | 513/156062/B |
| 513/156062/C | 513/156062/D |
| 513/157727/A | 513/157739/A |
| 513/157739/B | 513/157850/A |
| 513/157850/B | 513/157850/C |
| 513/157850/D | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/143856/A | 513/152233/A |
| 513/155088/A | 513/155431/A |
| 513/155431/B | 513/155439/A |
| 513/155439/B | 513/156057/A |

### உடுவில்

| | |
|---|---|
| 511/157619/A | 513/157732/A |
| 513/157982/A. | |

### சங்கானை

| | |
|---|---|
| 513/138407/A | 513/150782/A |
| 513/150784/B | 513/150784/C |
| 513/150784/D | 513/155144/A |
| 513/155388/A | 513/155388/B |
| 513/155388/C | 513/156020/A |
| 513/156054/A | 513/156054/B |
| 513/156054/C | 513/157797/A |
| 513/157797/B | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/131571/A | 511/131571/B |
| 511/144901/A | 511/154323/A |
| 511/154512/A | 511/154512/B |
| 511/154512/C | 511/154512/D |
| 511/154559/A | 511/154559/B |
| 511/154559/C | |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/144754/A | 511/144855/A |
| 511/144855/B | 511/144855/C |
| 511/144856/A | 511/144856/B |
| 511/144856/C | 511/144856/D |
| 511/144857/A | 511/144857/B |
| 511/144857/C | 511/147688/A |
| 511/147688/B | 511/147688/C |
| 511/147688/D | 511/156723/A |
| 511/156902/A | 513/147442/A |
| 513/152206/A | 513/152206/B |
| 513/152206/C | 513/152206/D |
| 513/152207/A | 513/152207/B |
| 513/152207/C | 513/152207/D |
| 513/152225/A | 513/152225/B |
| 513/152225/D | 513/155177/A |
| 513/155215/A | 513/155424/A |
| 513/155424/B | 513/155424/C |
| 513/157708/A | 513/157865/A |
| 513/157865/B | 513/157865/D |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/127264/A | 513/144070/A |
| 513/151960/A | 513/151960/B |
| 513/151960/C | 513/151960/D |
| 513/151960/E | 513/152530/A |
| 513/155293/A | 513/155348/A |
| 513/155348/B | 513/155348/C |
| 513/155376/A | 513/155378/A |
| 513/155378/B | 513/155378/C |
| 513/155378/D | 513/155378/E |
| 513/156032/A | 513/156032/B |
| 513/156076/A | 513/157735/A |
| 513/157871/A | 513/157871/B |
| 513/157871/C | |

### தெல்லிப்பழை


| | |
|---|---|
| 513/150792/A | 513/151873/A |
| 513/151873/B | 513/151963/A |
| 513/153413/A | 513/153413/B |
| 513/153413/C | 513/153414/A |
| 513/155089/A | 513/155235/A |
| 513/155235/B | 513/155235/C |

### உடுவில்

| | |
|---|---|
| 511/157621/A | 511/157621/B |
| 511/157621/C | 513/131725/A |
| 513/150423/A | 513/150423/B |
| 513/152140/A | 513/152140/B |
| 513/155252/B | 513/155382/A |
| 513/155450/A | 513/155476/A |
| 513/155477/A | 513/157752/A |
| 513/157752/B | 513/157771/A |
| 513/157800/A | 513/157800/B |
| 513/157848/B | 513/157881/A |
| 513/157881/B | 513/157904/A |
| 513/157904/B | 513/157940/A |
| 513/157940/B | 513/157941/A |

# எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் தமது ஒற்றுமையை வெளிக்காட்ட வேண்டும்

## மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைவர் இராமேஸ்வரன் தெரிவிப்பு



பேட்டி கண்டவர்
கேசரி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு கலந்து ஆலோசித்து ஒட்டுமொத்த வாக்குகளையும் ஒரு சின்னத்துக்கே அளித்து தமிழ்மக்களின் ஐக்கியத்தினை உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

இவ்வாறு மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைவர் என்.ஆர். இராமேஸ்வரன் உதயனுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட இராமேஸ்வரனும் அவரது சகோதரரான இராமமூர்த்தியும மக்கள ஜனநாயகப் பேரவை என்னும் கட்சியை அமைத்துள்ளனர்.

இந்தக்கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தனது உறுப்பினர்களை நிறுத்துவ தற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

கட்சியின் தலைவருடன் நடத்தப்பட்ட செவ்வியின் விவரம் வருமாறு:-

**கேள்வி:- இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அனேக அரசியற் கட்சிகள் உருவாகியுள்ளன. இவை அனைத்துமே கொள்கையளவில் ஐக்கிய இலங்கைக்குள் ஏற்படக்கூடிய தீர்வையே ஏற் றுக்கொண்டாக வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளன. அப்படி இருக்க நீங்கள் புதிதாக மக்கள் ஜனநாயகப் பேரவையை உருவாக்கிய காரணம் என்ன?**

**பதில்:-** பல்வேறு அரசியல் கட்சிகள் உருவாகியதற்கு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டமும் ஒரு காரணம் ஆகும். வெவ்வேறு கொள்கைகள், பல்வேறுபட்ட பாதைகள் ஊடாக ஆயுதப் போராட்டத்தை நடத்திய இயக்கங்கள் அனைத்தும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் (விடுதலைப்புலிகள் தவிர்ந்த) தம்மை ஜனநாயகக் கட்சிகளாகப் பதிவு செய்து கொண்டன.

1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியும், 1988 ஆம் ஆண்டு ஈரோஸ் அமைப்பும், 1994 ஆம் ஆண்டு ஈ.பி.டி.பியும் வலுவான நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தன.

இதில் ஈரோஸ் கொள்கை அடிப்படையில் உடனடியாகவே தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்தது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈ.பி.டி.பியும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வேலை வாய்ப்புகளுக்கு ஒரு களமாகப் பாவித்தனவே தவிர தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தவறிவிட்டன. இதுவே தற்போதைய அரசியற் தீர்வுத்திட்டம் வரையில் நடந்த உண்மை நிலையாகும்.

எத்தனை காலம்தான் அன்றாடப் பிரச்சினைகளுக்கான நிவாரணத்தை நம்பி வாழ்வது? இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபாவினால் இழப்புக்களை ஈடுசெய்ய முடியுமா? எனவே தான் அன்றாடப் பிரச்சினைகளை விட அடிப்படைப் பிரச்சினையால் தமிழர்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்யக் கூடிய தீர்வை நோக்கி ஒரு ஜனநாயகப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய தேவை இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ளது. இதனை உணர்ந்தே நாம் மக்கள் ஜனநாயகப் பேரவையை அமைத்துள்ளோம்.

### ஜனநாயகப் போராட்டம்

**கேள்வி:-ஜனநாயகப போராட்டம் மூலம் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று நம்புகிறீர்களா?**

பதில்:- வடக்கு-கிழக்கில் நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டமானது தீவிரம் அடைந்துள்ள இன்றைய நிலையில் ஜனநாயக ரீதியிலான அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கி நகர முடியும் என நம்புகிறோம்.

**கேள்வி:- நடைபெறவுள்ள 11ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவீர்களா?**

**பதில்:-** ஆம். உலகின் கவனத்தை எம் மக்களின் பிரச்சினை மீது ஈர்ப்பதற்கு நாடாளுமன்றத்தை ஒரு களமாகப் பயன்படுத்த முடியும் என்பதால் நிச்சயமாக நாம் போட்டியிடுவோம்.

**கேள்வி:- 1976 ஆம் ஆண்டு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கின. அதனால் 1977இல் வலிமையாக நாடாளுமன்றம் சென்றது போன்று இம்முறையும் கூட்டணி அமைய வாய்ப்பு உள்ளதா?**

**பதில்:-** நாம் ஐக்கியப்பட்ட கூட்டணியையே விரும்புகின்றோம் என்பதால் பல கட்சிகளுடனும் தொடர்பு கொண்டு வருகின்றோம். எனினும் இன்றுள்ள தமிழக் கட்சிகளின் சார்பு நிலைகள், அதீத தன்னம்பிக்கைகள் காரணமாக ஐக்கியப்பட்ட கூட்டணி ஒன்று அமைவதற்கான சாத்தியம் குறைவாகவே உள்ளது. சில இடங்களில் ஒரு சில கட்சிகள் தங்களுக்குள் கூட்டு வைத்து செயற்படவுள்ளன. ஐக்கியப்பட்ட கூட்டணி ஒன்று சாத்தியமாகாத பட்சத்தில் சுயேட்சையாகவே போட்டியிடுவோம்.

**கேள்வி:- பல அரசியல் கட்சிகள் மத்தியில் சுயேட்சையாகப் போட்டியிட்டு இந்தத் தேர்தலில் வெல்ல முடியும் என்று நம்புகிறீர்களா?**

**பதில்:-** மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என நினைத்தால் கட்சிகள் ஐக்கியப்பட வேண்டும். கட்சிகள் ஐக்கியப்படவில்லை என்றால் மக்கள் சுயேட்சையாகத் தங்களுக்குள் இருந்து நபர்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்புவதன் மூலம் ஐக்கியத்தைப் பற்றிக் கட்சிக்கு நல்ல பாடம் புகட்டுவார்கள் என்று நம்புகின்றேன்.

**கேள்வி:- எமது பத்திரிகை ஊடாக மக்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

**பதில்:-**ஆம். வடக்கு-கிழக்குத் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை அரசியலில் சகலவிதமான பரிமாணங்களையும் அவர்கள் அனுபவித்து உணர்ந்தவர்கள் என்பதால் எவரும் அவர்களை ஏமாற்றமுடியாது. எனினும் அவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். எதிர்வரும் தேர்தல் காலத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பற்பல சலுகைகளைத் தர முன்வரும் அவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள் தவறில்லை. ஆனால் உங்களுக்குள் ஒன்றுபட்டுக் கலந்து ஆலோசனை செய்து ஒட்டுமொத்த வாக்குகளையும் ஒரு சின்னத்துக்கே அளித்து தமிழர்களின் ஐக்கியத்தினை உலகுக்கு எடுத்துக்காட்டுங்கள். ❑

# ஆத்திரம் கொண்டுள்ள மக்களால் இந்த அரசு தோற்கடிக்கப்படும்!

## இப்படிக் கூறுகிறார் அனுரா



கொழும்பு,செப்.1

ஆட்சிக் காலத்தில் பல இன்னல்களுக்கும் ஆளாகிய நாட்டு மக்களால் இன்றைய அரசாங்கம் தோற்கடிக்கப்படும்.

முன்னாள் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க. பிரமுகருமான அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வெவெல்தெனிய என்ற இடத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சகல ஆட்டங்களிலும் ஜனாதிபதி சந்திரிகா தோல்வி கண்டுவிட்டதால் அவரது ஆட்டம் முடிகிறது. அரசாங்கம் மக்களால் தோற்கடிக்கப்படும் என்பதை ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் நன்கு உணர்ந்துள்ளனர். அதனால்த்தான் தேர்தலை நடத்தாமல் பல திருகுதாளங்களையும் புரிய ஜனாதிபதி முன்வந்தார். ஆனால் மகா சங்கத்தினரின் பின்னணியுடன் ஐ.தே.கவும் வேறு சில கட்சிகளும் புதிய அரசமைப்பைத் தோற்கடித்துவிட்டன. வேறு வழியின்றி நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டியதாயிற்று. இந்தச் சூழ்நிலையில் அவரால் இனி எதுவும் செய்ய முடியாது - என்று அனுரா மேலும் தெரிவித்தார். (ஜ-6-20)

# விமானத்தைக் கடத்தியவர் விமானச் சின்னத்தில் போட்டி!

கொழும்பு,செப்.1

1980 ஆம் ஆண்டு இத்தாலிய விமானம் ஒன்றைக் கடத்திய குற்றத்திற்காகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவரான சேபால ஏக்கநாயக்க எதிர்வரும் பொதுத்தேர்தலில் விமானச் சின்னத்தில் போட்டியிட உள்ளார்.

ஹரிச்சந்திர விஜேதுங்க தலைமையிலான சிங்கள பூமிபுத்ரக்கட்சியின் சார்பாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இவர் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சேபால தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி குறித்து நீதி மன்றத்தில் யாரும் சவால் விடுக்காத வரையில் அவர் போட்டியிடுவது உறுதி எனவும் -

இலங்கை தேர்தல் சட்ட விதிகளின்படி ஏழு ஆண்டுகளுக்குக் குறைவாகச் சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் -

ஹரிச்சந்திர விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

விமானக் கடத்தல் குற்றத்துக்காக ஆரம்பத்தில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட சேபாலவுக்கு அவரது மேன்முறையீடு காரணமாக இந்தத் தண்டனை ஐந்தாண்டாகக் குறைக்கப்பட்டது.

பூமிபுத்ர கட்சியின் தேர்தல் சின்னம் விமானம் ஆகும். அச்சின்னத்திலேயே சேபால போட்டியிடவுள்ளார்.

1980 ஆம் ஆண்டு 261 பயணிகளுடன் பாங்கொக்கில் இருந்து இத்தாலி சென்ற விமானத்தை சேபால கடத்திச் சென்றிருந்தார்.(ஜ-6-8-20)

## தையல் பயிற்சி

வடமராட்சி,செப்.1

பாடசாலையை விட்டு வெளியேறிய யுவதிகளுக்கென தையல் பயிற்சி வகுப்பு ஒன்றினை அறவழிப் போராட்டக்குழு ஆரம்பிக்கவுள்ளது.

இம்மாதம் 14 ஆம் திகதி முதல் பருத்தித்துறை சத்துணவுக் கூடத்தில் இப்பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற விரும்புவோர் 'அறவழிப் போராட்டக் குழு சத்துணவுக் கூடம், பருத்தித்துறை' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் வி.ஜி.தங்கவேல் கேட்டுள்ளார். (ஜ-173)

## கொடுப்பனவுகள் வழங்கல்

தென்மராட்சி,செப்.1

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள், அமைய சிற்றூழியர்கள், நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள் இளைப்பாறிய அதிபர்களின் கடைசி மாதச் சம்பளம் ஆகியவை எதிர்வரும் நான்காம் திகதி திங்கட்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க.117)

## இயங்குகிறது

வடமராட்சி,செப்.1

சாவகச்சேரி நுணாவிலில் இயங்கி வந்த அறவழிப் போராட்டக் குழு தற்போது பருத்தித்துறையில் உள்ள சத்துணவுக்கூடத்தில் இயங்கி வருகிறது.

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களையடுத்து கடந்த மூன்று மாதகாலமாக அறவழிப் போராட்டக்குழுவின் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாது இருந்து வந்தது. (ஜ-173)

## 3 ஆம் காலாண்டு மருந்து விநியோகம்

குருநகர்,செப்.1

யாழ்.பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் கீழ் இயங்கும் வைத்திய நிலையங்களுக்குரிய மூன்றாம் காலாண்டுக்குரிய மருந்து விநியோகம் தற்போது நடைபெற்று வருகின்றது. (க-51)



**யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச் செயாளர் யோசப்பாலா எழுதிய 'கிசுகிசு' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு.ஜே.பி.ஈ.செல்வராசா அடிகள் நூலை வெளியீட்டு வைக்க, சிறப்புப்பிரதியை 'அகவொளி' இயக்குநர் எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகள் பெற்றுக்கொள்வதையும் நடுவில் நூலாசிரியர் யோசப்பாலா (மாலையுடன்) நிற்பதையும் படத்தில் காணலாம்.** *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்).*

# ஐ.தே.க. உறுப்பினர் கோங்ஹஹே ஆளுங் கட்சியில் இணைகிறார்!



கொழும்பு,செப்.1

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் கண்டி மாவட்டத் தலைவருமான சரத் கோங்ஹஹே ஐ.தே.கவில் இருந்து வெளியேறியுள்ளார். அவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து தேர்தலில் போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில வாரங்களாக மனமாற்றங்களுக்கு உட்பட்டிருந்த அவர் தனது பதவி விலகல் கடிதத்தைக் கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவிடம் கடந்த செவ்வாயன்று கையளித்தார்.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அபிப்பிராயங்களை வெளியிடவிடாமல் தன்னைத் தடுத்து வைத்தமை -

விடுதலைப் புலிகள் விடயத்தில் கட்சி கொண்டுள்ள மென் போக்கு ஆகியனவே தமது பதவி விலகலுக்கான காரணங்களென்று சரத் கோங்ஹஹே தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பதை கட்சித் தலைமை விரும்புவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பொ.ம.ஐ.முன்னணியிடம் இருந்தும், பிரஜைகள் முன்னணியிடம் இருந்தும் தமக்கு அழைப்பு வந்துள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

# நாட்டில் பெரும் சிறைக் கைதி நானே என்கிறார் ஜனாதிபதி!



கொழும்பு,செப்.1

இந்த நாட்டின் எதிர்காலத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்பட்ட வேளையில் அதனை மறுத்த நான் நாட்டைவிட்டுச் சென்றேன். எனினும் மீண்டும் அப்பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று நான் சுதந்திரமாக எங்கும் செல்ல முடியாது. இந்த நாட்டின் பெரும் சிறைக் கைதி நான்தான்.

- இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா.

அத்தனகல வத்துபிட்டிவல பிரதேசத்தில் இளைஞர் மத்திய நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் இளைய தலைமுறையினரிடமே தங்கியுள்ளது. எனினும் கடந்த 23 வருட காலமாக நாளுக்கு நாள் அவர்களுடைய பிரச்சினைகள் உக்கிரமடைந்து வந்துள்ளதுடன் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு ஆயுத கலாசாரத்தை அவர்கள் நாடினர். இன்று நாம் நாடெங்கும் ஸ்தாபித்து வரும் இளைய தலைமுறையினர்களுக்கான நிலையங்கள் காரணமாக புதிய நிலைமை ஏற்பட்டு வருகின்றது. புதிய கல்விச் சீர்திருத்தமும் நாட்டில் மிகவும் பொருத்தமான நவீன மாற்றங்களை ஏற்படுத்தும்.

பயங்கரவாதிகளுக்கு எதிராக மட்டுமல்லாது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் யுத்தத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இந்தப் பெரும் பணியில் இந்த நாட்டின் புதிய தலைமுறை பங்குபற்றுகின்ற போது நிச்சயமாக நாடு புதிய மாற்றத்தை அடையும் - என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# படையினரின் பெற்றோர் வன்னி செல்ல ஆயத்தம்

யுத்த முனைகளில் காணாமல் போன படையினரின் பெற்றோர் சங்கம் வன்னியில் விடுதலைப் புலிகளைச் சந்திக்கச் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக பெற்றோர் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இவ்வாரம் பாதுகாப்பு அமைச்சு பதிலளிக்குமெனத் தாங்கள் எதிர்பார்ப்பதாக மேற்படி சங்கத்தின் தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வன்னியில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் தங்கள் பிள்ளைகளைச் சந்திக்கச் செல்லும் அனைத்துப் பொறுப்பையும் தாங்களே ஏற்றுக் கொள்வதாக இதுவரை 40க்கும் மேற்பட்ட பெற்றோர், பாதுகாப்பு அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளனர். தாங்கள் வன்னி செல்வதற்கான உறுதியான பதிலை வழங்கக் கோரியே இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இதற்கான பதிலை இவ்வாரம் தருவதாகப் பாதுகாப்பு அமைச்சும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்கனவே, மதத் தலைவர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக கடிதங்களை அனுப்பியிருந்தபோது புலிகள் அதற்குச் சாதகமான பதிலை அனுப்பியதுடன் தங்களது வருகைக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் ஈ.பி.நாணயக்கார தெரிவித்தார். (ஐ-6)

# எமது கலாசார விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

## கும்பாபிஷேக விழாவில் உரை

கொழும்புத்துறை,செப்.1

தமிழ் மக்களின் புராதன சின்னங்கள், கலாசார விழுமியங்கள் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான என். திரிலோகநாதன்.

தொல்புரம் பத்தானையம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்படியான மகா கும்பாபிஷேக விழாவின் மூலம் அப்பகுதி புனிதமடைகின்றது. தமிழ் மக்களது புராதன சின்னங்கள் கலாசார விழுமியங்களை இன்றைய போர்ச்சூழலில் அழியவிடாது பாதுகாக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் நோக்கம்.

இப்புனிதஸ்தலம் மேன்மேலும் வளர்ச்சியுற இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளோம்.

உடனடியாக பத்தானைக்கேணி திருத்த வேலைகளை ஆரம்பிக்கவும், ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்

இந்த நிகழ்வில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

### ப்ருந்தாவன பிரவேச விழா

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள ப்ருந்தாவன பிரவேச விழா எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நல்லூர் ஸ்ரீராகவேந்திரா மடாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிருஷ்ண ராகவேந்திர காணங்களையும் நிவேதனப் பொருள்களையும் வழங்க விரும்புவோர் மேற்படி மடாலய நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

### சான்றிதழ்கள் வழங்கல்

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழ்கள், எதிர்வரும் நான்காம், ஐந்தாம், ஆறாம் திகதிகளில் பி.ப ஒரு மணி தொடக்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வழங்கப்படுமென அதிபர் கு.சிவானந்தம் அறிவித்துள்ளார். (க-117)

### பயிற்சி பட்டறை

வடமராட்சி,செப்.1

வடமராட்சிப் பகுதியில் உள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கு கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வரும் இனவிருத்தி சம்பந்தமான மூன்றாம் கட்ட பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 5 தினங்கள் நடைபெறும்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக விரிவுரை மண்டபத்தில் இப்பயிற்சிப் பட்டறை இடம்பெறும். (ஐ-173)

### முன்பள்ளி ஆசிரியருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.1

வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நீர்வேலி அத்தியாயர் இந்துக்கல்லூரியில் சங்கத் தலைவி ஞானேஸ்வரி கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தகைமைச் சான்றிதழ், நற்சான்றிதழ், சுயவிவரம், வித்தியா பதிவு போன்ற ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

### குழந்தைகளுக்கான ஊசி மருந்து தட்டுப்பாடு

வடமராட்சி,செப்.1

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் குழந்தைகளுக்கான முக்கூட்டுத் தடுப்பூசி மருந்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாகத் தாய், சேய் சிகிச்சை நிலையங்களில் குழந்தைகளுக்கு முக்கூட்டுத தடுப்பூசி மருந்து வழங்கப்படுவதில்லை. (ஐ-173)


உ

தும்பளை நெல்லண்டை அம்மன் ஆலய

**பாலஸ்தாபன கும்பாபிஷேகம்**

பேரன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் ஆவணிமாதம் 18 ஆம் நாளாகிய (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை, சுவாதி நட்சத்திரமும், கன்னி லக்கினமும், சித்தயோகமும் கூடிய காலை 7 மணி முதல் 8.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இவ்வைபவம்
பிரம்மஸ்ரீ
சுவாமிநாத இராஜேந்திர சிவாச்சாரியார்
தலைமையில் நடைபெறும்.

*நெல்லண்டை,*
*அம்மன் கோயில்,*
*தும்பளை.*

- தரும பரிபாலன சபை

(77849)



**மங்களகரமான ஆரம்பம்**

இன்று (01-09-2000) வெள்ளி காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரையுள்ள சுபநேரத்தில்

**'மதுரா மெடிக்கல்ஸ்'**

என்னும் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படுகிறது.

சகலவிதமான ஆங்கில மருந்து வகைகள், பால்மா வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

*187, C, கே.கே.எஸ்.வீதி,*
*சுன்னாகம்.*

உரிமையாளர்
Dr.E.சுந்தரேஸ்வரன்.

(77872)



ஓம் முருகன்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் நாளை (02-09-2000) சனிக்கிழமை சித்தயோகமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய மாலை 5 மணி முதல் 6.00 மணி வரையுள்ள சுப வேளையில்



எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ரஜீந்திரன்**
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**வினோதா**
அவர்களுக்கும்

கனடா 3330 பாமஸி அவெனியூ ஸ்காபரே ஒன்ராறியோ மெகா பெங்குவட் மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்குத் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி ச.கைலாயபிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)
திரு.திருமதி ச.குமரகுரு
*240, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

இருவீட்டார் அழைப்பு

திரு. திருமதி வேலுப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)
*செட்டிகுள வீதி,*
*வவுனியா.*

(77864)



உ

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 18 ஆம் நாள் (03.09.2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.28மணி தொடக்கம் நண்பகல் 12.28 மணி (பழைய நேரப்படி) வரையுள்ள விருச்சிக இலக்கினத்திலும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**ஸ்ரீதரன்**
Engineer (MSc-Russia)
அவர்களுக்கும்




எனது புத்திரி
திருநிறைசெல்வி
Dr.**கிருஜா** (BSMS)
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு நல்லூர் சட்டநாதர் கோயில் திவ்விய ஜீவன கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் சமுகந்த்ந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி இ. கனகரத்தினம் குடும்பம்
V.R.K. MILL,
*இல.364, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

திருமதி இரத்தினசிங்கம் குடும்பம்
*சிவன் வீதி,*
*கோண்டாவில் வடக்கு.*

(இருவீட்டார் அழைப்பு)

(77734)

## கேள்வி அறிவித்தலுக்கான கால எல்லை நீடிப்பு

**வலயக் கல்வித் திணைக்களம்தென்மராட்சி**

2000 - 08 - 23ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரங்கள் 2000 - 09 – 07ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 2000 – 09 – 14ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விக்கூண்டில் இடப்பட்டு, காலை 10.30 மணிக்கு திறக்கப்படும்.

வ. செல்வராசா
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(சி/12779)



## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன கணக்காளர்
திரு. நா. சண்முகம்
அவர்களின் தாயார்

### திருமதி நாகலிங்கம் சிதம்பரம்

அவர்களின் மறைவால் துயரமடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

DCS
124/2, Palaly, Road,
Thirunelvely.

(சி/12781)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அம்பலவாணர் (அருளம்பலம்) நாகலட்சுமி

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி அம்பலவாணர் (அருளம்பலம்) நாகலட்சுமி நேற்று (31-08-2000) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி—அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமணி—தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் வவுனியா பிரபல வர்த்தகர் அம்பலவாணரின் (அருளம்பலம்) அன்பு மனைவியும் சுதாசினி, சுமதி, சுகந்தி, திரிபுவனன், துஷ்யந்தன், முரளிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயசங்கரின் (கனடா) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மயில்வாகனம், பொன்னுத்துரை, இரத்தினபூபதி(அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இரத்தினபூபதி குணசீலன்
(சகோதரி)

50/4, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(77899)

### திருமதி காலமுத்து பசுபதி

உடுப்பிட்டி இமையாணன் புலவர் இல்லத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், ஆறுமுகம் சட்டம்பியாரின் மகளும், காலஞ்சென்ற வல்லிபுரநாதர் பசுபதி (சுகாதாரப் பரிசோதகர்) அவர்களின் மனைவியுமாகிய காலமுத்து அவர்கள் 30 - 08 – 2000 (புதன்) அன்று இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம், காலஞ்சென்ற நாகேஸ்வரி (மலேசியா), தேவகியம்மா (இளைப்பாறிய — ஆசிரியை), வல்லிபுரநாதன் (கனடா—இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கனகாம்பிகை (U. S. A.), இராஜேஸ்வரி (ஆசிரியை, உ. அ. மி. கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அன்னையும், காலஞ்சென்ற மாணிக்கம் (ஆசிரியை), வேல்முருகு (இளைப்பாறிய ஆசிரியர்), லேகண்டன் (இளைப்பாறிய ஆசிரியர்), சகுந்தலா (கனடா), Dr. மகாதேவன் (U. S. A), தில்லையம்பலம் (இளைப்பாறிய பிரதி அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இளங்கோ (மலேசியா), புவனேஸ்வரி (மலேசியா), சிறிநாதன் (மலேசியா), சிவாம்பிகை (கொழும்பு), நித்தியானந்தன் (நோர்வே), இராஜ்குமார் (பேராதனை பொறியியற் பீடம்), வேணுகா (பேராதனை பல் மருத்துவ பீடம்), பானு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் மற்றும் ஜீவகுமாரின் (மலேசியா) பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31 - 08 - 2000 வியாழன் அன்று திருவாதணி இமையாணன் வடக்கில் இடம்பெற்று எள்ளங்குளம் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ச. தில்லையம்பலம்
(மருமகன்)

திருவாதனி,
உடுப்பிட்டி.

(சி/12776)

# மாநகர சபைக்கு நிதி வழங்குவதில் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை

## பிரதி மேயர் ரவிராஜ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செ. 1

யாழ். மாநகர சபைக்கு தேவையான உதவிகளை வழங்குவதில் அரசாங்கம்மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றது.

இவ்வாறு யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்துக்கு தலைமை வகித்த மாநகரசபையின்பிரதிமேயர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று யாழ். இந்து விடுதியில்நடைபெற்றது. இத்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் தலா 2 உறுப்பினர்களும் உட்பட 10 உறுப்பினர்கள்கலந்து கொண்டனர். ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

யாழ். மாநகர சபையின் உறுப்பினராக இருந்து மரணமான ஈ. பி. டி. பியைச் சேர்ந்த அன்ரன் சிவலிங்கத்தின் மறைவுக்கு கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்துக்கு தலைமை வகித்த பிரதி மேயர் கூறியதாவது:-

யாழ். மாநகர சபையில் நிதிப்பற்றாக்குறை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் அரசாங்கம் மாநகர சபையை திட்டமிட்டுப் புறக்கணித்து வருகின்றது.

கடந்த இரண்டு வருடங்களாக நாம் யாழ். மாநகர சபையைப் பொறுப் பேற்று நடத்தி வருகின்றோம் சபைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஜனாதிபதி, மாகாண ஆளுநர் உட்பட பல அதிகாரிகளுடன்பேச்சுநடத்தினோம் ஆனால் எவரும் சபைக்கு நிதி ஒதுக்குவதாகத் தெரியவில்லை.

''நாங்கள் பிச்சை கேட்டு வரவில்லை. மாநகர சபைக்குரிய நிதியை ஒதுக்கீடு செய்வது உங்கள் கடமை அந்தக் கடமையிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள்''— என்று அமைச்சருடன் பேச்சு நடத்தியபோது நாம் தெரிவித்தோம்.

எங்களுடைய சுயமுயற்சியினால்தான் மாநகர சபையை இயங்கச் செய்ய வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபையை புறக்கணிப்பதற்கு எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டன ஆனால் யாழ். மாநகர சபைக்கு இதுவரையும் வாகனம் எதுவும் வழங்கப்படவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார்

ஈ. பி. ஆர். எல். எவ் பிரதிநிதி த. சுபத்திரன், கூட்டணி உறுப்பினர்களான எஸ். சின்னத்துரை, எஸ். முகுந்தன், செ. விஜயரட்ணம், புளொட் பிரதிநிதி எம். தவநாதன் ஆகியோரும் கூட்டத்தில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மாநகர சபைக்கு சொந்தமான கடைக் கட்டட வியாபார அனுமதி தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர் ஆர். மங்களநேசன் கூட்டத்தில் கிளப்பிய சர்ச்சையைத் தொடர்ந்து பிரதி முதல்வருக்கும் அவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

(இ-5-173)

## ஆவணிச் சதுர்த்தி இன்று

கொழும்புத்துறை, செப். 1

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான விநாயகர் ஆலயங்களிலும் விநாயகர் விக்கிரகங்கள் உள்ள ஆலயங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை விநாயகர் அவதரித்த ஆவணிச் சதுர்த்தித் தினம், விசேட சங்காபிஷேகம், பூசை ஆராதனை, வழிபாடுகளுடன் சிறப்பாக நடைபெறும்.

(க-30)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 1

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதன் தலைவர் கேட்டுள்ளார். (க)

## சித்திரப் பாட ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 1

தமிழ்மொழி மூல அரசினர் பாடசாலைகளுக்கு கிழைத்தேய சங்கீத, நடன, சித்திரக் கலை ஆசிரியர்களை சேர்த்து கொள்ளும் திட்டத்துக்கமைய யாழ்ப்பாண கல்விவலயத்தில் சித்திரபாடத்துக்கென இன்று முதல் ஆறு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:

பி. சிவகரன் (குமரகோட்டம், கோண்டாவில்), வி. அன்ட்ராஜன் (10, ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்), பி. கஜேந்திரன் (நாகவிலா, கொக்குவில் மேற்கு), எம். டொமினிக் ஜீவா (13/20, டேவிட் வீதி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்), எம். தர்மகுமார் (நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு) செல்வி பி. ஜீ. அனுஷா டொரிஜா (19/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்).

மேற்குறித்தவர்கள் தமது நியமனக்கடிதங்களை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரின் தற்காலிக அலுவலகத்தில் உடனடியாக பெற்றுக்கடமையை பொறுப் பேற்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார். (க)

## செல்வா நினைவுத் தூபிப் பகுதியை துப்புரவு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். நகரில் கோட்டைக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபிச் சுற்றாடலை இரு வாரங்களுக்கு ஒரு முறையாவது துப்புரவு செய்ய வேண்டும்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபையில் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:

★ யாழ். பிரதேச செயலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு நகரில் பொருத்தமானஇடம் ஒன்றை பெற்றுத் தருமாறு யாழ். பிரதேச செயலகம் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று பொருத்தமான இடத்தை தெரிவு செய்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபை அதிகாரிகளை கேட்டுக் கொள்ளுதல்.

★ யாழ். நவீன சந்தைக் கடைகளின் உரிமை மாற்றம் தொடர்பாக பிணக்குகள் இல்லாத வகையில் கடைகள் நடத்துபவர்களுடன் புதிய வாடகை ஒப்பந்தம் செய்தல்.

★ 35 லட்சம் ரூபா செலவில் வீதி றோலர் ஒன்றைச் சபைக்கு கொள்வனவு செய்தல்.

★ யாழ். மாநகரசபை முதல்வர் மற்றும் ஆணையாளரின் பாவனைக்கென வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தல்.

இவை உட்பட மற்றும் பல தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## கௌரவிப்பு

சுன்னாகம் கந்தரோடை ஆலடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் தின்போது பத்துத் தினங்கள் தொடர்ந்து சமயச் சொற்பொழிவு ஆற்றிய வ. குமாரசாமி ஐயர் மேற்படி ஆலய பரிபாலன சபையினரால் அண்மையில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

(இ-7-30)


சாவகச்சேரி நகரசபை ஊழியர்
**திரு. க. யோகநாதன்** அவர்களின்
அகால மறைவையொட்டிய

## கண்ணீர் அஞ்சலி

சாவநகர் சந்தையிலே கலகலத்துத் திரிந்தாய்
சாரதியாய் மிடுக்குடனே நகர்முழுதும் பவனி வந்தாய்!
சமயோசிதமாய் பலபணிகள் விருப்புடனே
ஆற்றி வந்தாய்!
சந்தை கலைந்ததென்றோ வடமராட்சி
நோக்கி வந்தாய்!

செவ்வாய் இதழ்கள் இன்னும் மறையவில்லை... நீ
சென்று வந்த சுவடு நன்றாய் அழியவில்லை...
செப்புதற்கோ வார்த்தையில்லை எங்கே
சென்றுவிட்டாய்?
சென்ற வழி தெரியவில்லை காரணமும் புரியவில்லை!!

விசுவாச ஊழியனாய் விளங்கினாய் யோகநாதா!
விலகிவிட்டாய் எமைவிட்டு காணாத ஊரதற்கு...
விம்மிப் பொருமி வெடித்துக் கதறினாலும்
விரும்பி திரும்பிடாய் நீ! விழி மல்க அரற்றுகிறோம்!

நகர சபை,
சாவகச்சேரி.
(சி/12778)

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் என்ற நான்கு பிரிவுகளில் அமைந்த 38 கட்டுரைகள் கொண்ட நூல், க.பொ.த. மாணவர்கள் தமிழ்மொழி கற்க உதவும். அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது. ரூபா 125.00 (77740)

## இலகு திருமண சேவை

1954 புனர்பூசம் **Business**, 1958 மகம் **Business**, 1967 புனர்பூசம் **Electrical Engineer Canada**. 1971 **B.Sc**. சைவபோசன ஆசிரியர் மணமக்கட்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (77870)

## பொய்யாமொழி ஜோதிடம்

கல்வி, விவாகம், தொழில், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றில் உள்ள தடைகள் விலக ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாய் 140, பருத்தித்துறைவீதி, நல்லூரிலும் (வீரமாகாளி அம்மன் கோயிலடி), ஞாயிறு மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (77824)

## கண்டெடுக்கப்பட்டது

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் ஒரு தங்க நகை எம்மால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் மாலை 3 மணிக்குப் பின்னர் தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிற்பனை குமரன், 32, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (77869)

## தவறிவிட்டது

4 A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டிக்குளி எனும இடத்தை சேர்ந்த கல்யாணி கஜநாயகபாகு என்பவரது வி..அ. அட்டை (இல. 0901005717) 24-08-2000 அன்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77876)

இத்தியடி பிள்ளையார் கோயில் வீதி, சங்கத்தானை எனும் முகவரியைச் சேர்ந்த சிவலோகநாதன் சுதர்சினி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 807694162v), விசேட அ.அ. (இல. 091042498) என்பன யாழ். பஸ்நிலையத்துக்கும் தாவடிக்கும் இடையில் 27-08-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள லக்ஷன் வீடியோ சென்ரருக்கு அருகிலுள்ள நகைத் தொழில் அகத்தில் (உதயன் காரியாலயம் முன்பாக) ஒப்படைத்து உதவவும். (77881)

முனீஸ்வரன் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் எனுமிடத்தைச் சேர்ந்த மோட்சராசா நகுலேஸ்வரன் என்பவருடைய வி.அ.அட்டை (இல.0901007267) 30-08-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77882)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப் பெட்டி (SISIL R 80)இரு அடுப்புகளுடனான அவுண் (KEN WOOD) BLENDER MILL / GRATER 3 (MOULINEX) கோழிக்கூடு (சிறியது) மற்றும் வீட்டுத் தளபாடங்களும், வீட்டுப் பாவனைப் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நடராசா (சுண்டு), துணைவிச்சந்தி, வட்டுக்கோட்டை. குறிப்பு:- சனி, ஞாயிறு தினங்களில் முழுநாளும் பொருள்களைப் பார்வையிடலாம். (77878)

ரியூசன் வாங்கு, மேசைகள், தளபாடங்கள், இரும்புக் கிறில்கள், தையல் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. செ. தவகுலம், பீற்றர் சேர்ச் முன்பாக, நவாலி, மானிப்பாய் அல்லது 78, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (77879)

## இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (77819)

**EESAN INSTITUTE**
**k.k.s.Road, kondavil.**

**ENGLISH SPOKEN AND GRAMMAR**

**Mr.JEYAKUMAR**
**02-09-2K (sat)**
SAT., SUN. :- 7.00 A.M.
TUE.,THU. :- 6.15 A.M
(77862)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,செப்.01

தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு - நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியும்-நியமனம் கிடைக்கப் பெறாதவர்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு சங்கம் கேட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குச் சமர்ப்பித்த ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் ஏனைய ஆவணங்களையும் கொண்டு வருமாறும் தெரிவிக்கப்பட்டது. (க)

## சங்கக்கிளை திறப்பு

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கிளையில் கைதடிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வசித்து வரும் குடும்பங்கள் தங்கள் உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-135)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி நாகலிங்கம் நாகேஸ்வரியின்
தந்தையார்

### அமரர் நாகலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**A-97 தாதிய நண்பர்கள்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

(77883)

*சமூக அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்*

## பதவி வெற்றிடம்

மேற்படி வெற்றிடம் ஒன்று நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரர் ஊர்காவற்றுறை, வேலணைப் பிரதேசங்களில் தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு சம்மதமுடையவராக இருத்தல் வேண்டும்.

***வேண்டிய தகைமைகள்:***

- கல்வி குறைந்தது க.பொ.த. சாதாரணம் சித்திபெற்றிருத்தல். கணனி, ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- வயதெல்லை 45 வயதுக்கு மேற்படாதவர்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்ப முடிவு திகதி: **10-09-2000**
- விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

*திட்ட இணைப்பாளர்,*
*போரூட் உப அலுவலகம், சண்டிலிப்பாய்.*
(77871)

**ENGLISH**
**SPOKEN AND GRAMMAR**
**By: BRITTO**
(புதிய பிரிவு)
**ஆரம்பம்: 02-09-2000**
மாலை 4.30 (பழைய நேரம்)
*சனி, ஞாயிறு*
இடம்: *கொக்குவில்*
(ஞான பண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
(C/12703)

## NEW SCIENCE COLLEGE

**(யாழ்ப்பாணம்)**

**இணைந்த கணிதம்**

| **2001 A/L** | **2002 A/L** |
|---|---|
| மொத்தல் | காவிகள் |
| முட்டிய கோல்கள் | பொதுத்தீர்வு |

*ஆரம்பம்: 02-09-2000*
*(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)*
*A. பத்மநாதன்*
(77855)

## நீங்கா நினைவில் ஆண்டொன்று

"நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே;
நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே!"
(பிலி.1:21)



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 31 - 01 - 1946 | 01 - 09 - 1999 |

### திரு. யாக்கோபு செபஸ்தியாம்பிள்ளை
(பொன்னுத்துரை)

அப்பா!
எம் குடும்பத்தின் ஒளி விளக்கானீர்!
பாசத்தையும் பரிவையும் எமக்கூட்டினீர்!
பொறுமையின் பொக்கிஷமாய்
நேர்மையின் உறைவிடமாய் விளங்கினீர்!
ஆண்டுகள் பல செல்லலாம்
துன்பங்கள் எமை சூழலாம்
உமது அன்பும் அரவணைப்பும்
என்றும் எம் உள்ளத்தில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சி நிற்கும்

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன், மாமி, பேரன்.**

*ஆனைக்கோட்டை.* (77744)

## ஐந்தாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



**அமரர் சரவணமுத்து ஐயாத்துரை**

தோற்றம்: **01-11-1916**
மறைவு: **30-08-1995**

*திதி: 01-09-2000*

நன்றே எண்ணி நன்றே யாற்றி
நல்லோர் போற்ற நலம்பல நல்கிய
நம் இனிய தந்தையே!



**அமரர் தேவநாயகம் குடும்பம்**

**மறைவு 10-07-1995**

அன்பொடு பண்பு ஆற்றல் கொண்டு
இனிய மொழி பேசிடும் இனிய மகளே!
அறிவுரை கூறிடும் அன்புச் சகோதரியே!
இணைந்து குடும்பமதாய் எங்கு சென்றீர்?

ஆறாது எங்கள் உள்ளம்
அழியாது தங்கள் எண்ணம்

*23, உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*

(77812)

*திருமதி சி. ஐயாத்துரை*
*குடும்பத்தினர்.*

# உடுவிலில் மலேரியாத் தாக்கம் அதிகரிப்பு

உடுவில், சங்குவேலி, கந்தரோடை, சுன்னாகம், மயிலங்காடு, மயிலணி போன்ற கிராமங்களில் திடீரென மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

உடுவில், சுன்னாகம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களிலும் தினமும் ஏராளமானோர் மலேரியாக் காய்ச்சலுக்கான மருந்தினை பெற்று வருகின்றனர்.

தென்மராட்சி பகுதியில் மலேரியா தாக்கம் அதிகமாக காணப்பட்டதாகவும், தென்மராட்சியிலிருந்து அண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் மூலம் மலேரியாக் கிருமிகள் இங்கு பரவ வாய்ப்பிருப்பதாகவும் சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மலேரியா தாக்கத்தை கட்டுப்படுத்த தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தீவிர நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-152)

# 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் திங்கள் முதல் வியாழக்கிழமை வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை ஜே129,130,131, 132ஆகிய பிரிவுகளுக்கும் 5ஆம் திகதி ஜே133ஆவது பிரிவுக்கும் 6ஆம்திகதி ஜே137, 138,139,140,143, 144, 145, 146,148 ஆகிய பிரிவுகளுக்கும் 7ஆம் திகதி ஜே150 முதல் 155 வரையான பிரிவுகளுக்கும் கொடுப்பனவு வழங்கப்படும்.(க-100)


# JCIT

**Obtain Open university Exemptions with our Diplomas!**

The following courses will commence in early September.

**Computer courses**

1. **Advanced Diploma in Computer programming & data processing**
   Contains Excel 2000, Visual Basic (6.0), C, dbase & Assembly Language
   [One - year full time] Fees: 4500/=
2. **Diploma in Computer programming & data processing**
   Contains Excel 2000, Visual Basic (6.0), Pascal, Access 2000,Fox pro
   [One -year full time] Fees: 4000/=
   [Syllabus covers curriculum for NCCA examinations]
3. **Certificate course in business applications [Morning / Evening]**
   - MS Word 2000
   - MS Excel 2000
   - MS Access 2000
   - Power Point
   - Pascal
   - Visual Basic
   - Fox Pro
   - C/ C++

   [3 months] Fees: 1000/= each
4. **Australian computer society examinations [all 4 parts] (ACS)**
   (6 months) Fees: 2000/=
5. **British computer society examinations Fees Rs. 1500/= each module (BCS)**
   **Certificate level & Diploma level**
6. **Certificate Course in Computer Hardware (Morning & Evening) - 6months**
   **Fees: Rs. 2000**
7. **Classes for NCCA examinations - Nov. 2000 Fees: Rs.1000/=**
8. **Bachelors in Informations Technology (BIT) (University of Colombo)**

**Technical Courses**

9. **Craft Courses (will include basic introduction to computers - (தமிழ் மொழி மூலம்)**
   - Mechanical Craftsmanship Practice - Fees: Rs. 1450/=
   - Electrical Wiring & Installation Practice - Fees: Rs. 1450/=
   - Auto Mobile Technology [Basic Car Driving will be Taught] -Fees: Rs. 1450/=
   - Radio & T.V Servicing 1 year -Fees: Rs. 1500/=
10. **Technician Certificate Course in**
    - Basic Engineering (Covers all disciplines of Engineering) - 18 months
    - Electronics & Telecommunications - 1 year -Fees: Rs. 3000/=
    - Civil draughtsmanship - 1year - Fees: Rs. 1250/=
11. **Diploma in Electronics & Telecommunications - 3 years - Fees: Rs. 4575/=**

i. Scholarships & Studentships Given
ii. Facilities Library, Sports & Hostel
iii. Collect Application forms at our centre or Jaffna College undergraduate Department, 464, Hospital Road, Jaffna.
iv. Submit your applications directly or by post
v. Registration on September 6th at 10.30a.m

**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

(C/12763)



# சாதனையாளனை வாழ்த்துகிறோம்



*லண்டன் சேர்ச் பீல்ட் கனிஷ்ட பாடசாலையில் பயிலும்*

## லோகேஸ்வரன் அபிஷன்

தமது பத்தாவது வயதில் G.C.S.C (சாதாரண தர) பரீட்சையில் கணிதத்தில் அதி விசேட சித்தி பெற்றுச் சாதனை படைத்துள்ளார். விஞ்ஞான பாடத்திலும் திறமைச் சித்தி பெற்றுள்ளார். இவரது திறமையை மெச்சி இவர் வசிக்கும் றெட் பிரிட்ஜ் (Red Bridge) தொகுதியின் நகரபிதா சன்மானம் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

செல்வன் அபிஷன் லண்டனில் வசிக்கும் ப. லோகேஸ்வரன் - கலைவாணி தம்பதிகளின் மகனும் வட்டுக்கோட்டைப் பண்டிதர் வி. நவரத்தினம் (B.A) - வள்ளிநாயகி தம்பதியர், காரைநகர் பரமநாதன் - நாகம்மா தம்பதியரின் அன்புப் பேரனுமாவார்.

எங்கள் செல்வச் சீராளன் கல்வியில் மேலும் சாதனைகள் படைத்துச் சிறப்புற நயினை நாகபூஷணி அம்மன் இன்னருளை வேண்டி அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

**ந.வள்ளிநாயகி**
(அம்மம்மா)
'அன்னை இல்லம்'
கோண்டாவில் கிழக்கு

(77890)



# திறப்புவிழா அழைப்பு

**பொலிகண்டி சனசமூக நிலையம்**
(மக்கள் படிப்பகம்)
பொலிகண்டி
கட்டட நிர்மாண நிதியுதவி
**கடற்றொழில் அமைச்சு**

**மீனவர் தங்கு மண்டபம்**
பொலிகண்டி கிழக்கு
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
கட்டட நிர்மாண நிதியுதவி
**யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம்**

**காலம் : இன்று (01.09.2000) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி**

பிரதம விருந்தினர்
**திரு.சா.அ.யோசேப்**
யாழ்.மாவட்ட அதிகாரி, (மீன்பிடித் திணைக்களம்)

கௌரவ விருந்தினர்
**திரு.K.மயிலேறும் பெருமான்**
பொறுப்பதிகாரி, வல்வெட்டித்துறை வைத்தியசாலை

பிரதம விருந்தினர்
**திரு.ஆ.சிவசுவாமி**
பிரதேச செயலர், பருத்தித்துறை

கௌரவ விருந்தினர்
**திரு.C.G.ஜெயக்குமார் அடிகளார்**
இயக்குநர், மனித முன்னேற்ற நடு நிலையம் Hudec

சிறப்பு விருந்தினர்

திரு.நா.மகேந்திரன்
உதவித்திட்டப் பணிப்பாளர்,
பிரதேச செயலகம் பருத்தித்துறை

திரு.த.மகேஸ்வரன்
மீன்பிடிப் பரிசோதகர், பருத்தித்துறை

திரு.வே.இ.சத்தியமூர்த்தி
(தலைவர், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்) வடமராட்சி வடக்கு.

திரு.க.தர்மலிங்கம்
மீன்பிடிப் பரிசோதகர்,
யாழ்.மாவட்டம்

செல்வி
செல்லையாப்பிள்ளை பார்வதிப்பிள்ளை

திரு.இ.சிவபாலசிங்கம்
கிராமசேவையாளர்,
வல்வெட்டித்துறை.

திரு.ந.கணேசமூர்த்தி
முன்னாள் மீன்பிடிப்பரிசோதகர்,
பருத்தித்துறை

திரு.த.செல்வச்சோதி
கணக்காளர், கூட்டுறவு சமாசம்

திருமதி. தி.சாருமதி
கிராம சேவையாளர்,
பொலிகண்டி கிழக்கு

சிறப்பு நிகழ்ச்சி

பருத்தித்துறை மண் தந்த தவப்புதல்வன் சாண்டோ துரைரத்தினம் அவர்களால் சாண்டோ பட்டச் சான்றிதழ் பெற்றவரும், அன்னாரின் முதன்மை மாணவருமாகிய பொலிகண்டி சாண்டோ செல்வராசா அவர்களின் சிறப்பு மாணவர்களும் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக உறுப்பினருமாகிய வீரர்களால் நடத்தப்படும் என்றுமே கண்டிராத வீரதீர சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்திக் காண்பிக்கப்படும்.

பங்குபற்றும் வீரர்கள்

த.பரமானந்தம், செல்வன் கு.சந்திரமோகன், மு.சோதிரவி, செல்வன் சு.சிவனேஸ்வரராசா, செல்வன் தி.பிரேமசீலன், மூ.கந்தசாமி.

*அனைவரையும் அன்புடன் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம.*

*நிர்வாகம்,* **மக்கள் படிப்பகம்.**

*நிர்வாகம்,* **பொலி.கிழ.க.தொ.கூ. சங்கம்.**

(77838)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

நுண் கலைமாணி
(சித்திரமும் வடிவமைப்பும்)
அனுமதித் தேர்வு 1999/2000

மேற்படி கற்கை நெறிக்கு அனுமதித்தேர்வு 2000.09.09 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும். அனுமதிக்காக அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளை உடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் மேற்படி தேர்வுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த தகைமைகள் இருந்தும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 2000.09.04 ஆம் திகதி அலுவலக நேரத்தில் தேர்வுகளும் அனுமதிகளும் கிளை யாழ்.பல்கலைக்கழகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(C/12773) *பதிவாளர்.*



**துரித மீட்டல் வகுப்பு!**
(வினா விடை வகுப்பு)

அளவையியல்
S.S.மனோகரன்

பகுதி I, பகுதி II
நடைபெறுகின்றது
(சனி, ஞாயிறு)
பிரிவு I - 9 மணி
பிரிவு II - 12 மணி

BEACON
வெலிங்டன் சந்தி,
யாழ்நகர்.

(77886)

# திருமலையில் உண்ணாவிரதம் தொடர்கிறது!

திருகோணமலை,செப்.1

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஒரே அணியில் போட்டியிட வேண்டும் என்று கோரி தமிழர் விழிப்புணர்வு ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ்.ஜேசுதாசன் என்பவர் நேற்று முன்தினம் ஆரம்பித்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

அவரது உடல்நிலை மோசமாக இருந்ததாக நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது.

உண்ணாவிரதியை நேற்றுப் பார்வையிட்ட தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகியவற்றின் பிரமுகர்கள் தமிழர் விழிப்புணர்வு ஒன்றியத்தின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறியுள்ளனர்.

எஸ்.சூரியமூர்த்தி, டாக்டர் பாக்கியதுரை ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

தமிழர் விழிப்புணர்வு ஒன்றியம் இன்று ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் சகல கட்சிப் பிரமுகர்களும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3-150)


## STP Computer World

54A, Palaly Road, Kantharmadam TP: 2674

இலவச பயிற்சி நெறிகளும் புலமைப் பரிசில்களும்

**Batch III & IV ஆரம்பம்**

எமது இலவச பயிற்சியுடனான புலமைப் பரிசில் திட்டத்தில் இணைவதில் மேலும் பல மாணவர்கள் ஆர்வம் காட்டிவருவதனால் இப்புதிய பிரிவுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

ஆரம்பம் 02-09-00 (Sat. & Sun.) - 2.30 P.M
05-09-00 (Tue. & Wed.) - 2.30 P.M

பதிவுகளை பயிற்சி நெறி ஆரம்பமாகும் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் நேரடியாக வந்து உறுதிப்படுத்தவும்.

-நிர்வாகி


## லங்கா முடித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கெட்டைப் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிலும் அவசர காரியங்களுக்கு செல்பவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (இ-3)


## SUBRA - 14

சித்தன்கேணி

SPOKEN ENGLISH AND GRAMMAR

BY. BRITTO

ஆரம்பம்: செவ். 5.9.2000
7.00 (பழைய நேரம்)

குறிப்பு:-
எமது நிறுவனத்தில் ஆங்கிலம் கற்கும் மாணவருக்கு இலவச கணனிப் பயிற்சி வழங்கப்படும். (77790)



## Institute of Informatics Studies (IIS)

No. 100 Clock Tower Road, Jaffna.
(Affiliated with *IMIS*, UK)
Telephone No.: 21-2831 E-Mail: iis@sltnet.lk

புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் 02/09/2000 பகல் 10.00 மணி

**Degree Course**

Bachelor of Information Technology (BIT)
Conducted by University of Colombo.

**Diploma Courses**

* Advanced Diploma in Applied Computer Science
* Diploma in Software Engineering
* Diploma in Computer Programming
* Diploma in Personal Computer Specialist
* Technician Diploma in Computer Hardware
* Diploma in Microsoft Office 2000
* Diploma in Internet & E-Mail Communication

**Professional Courses**

* BCS Stage I & Stage II Conducted by British Computer Society, U.K.
* ACS Stage I to Stage IV Conducted by Australian Computer Society, Australia.
* NECS Stage I to Stage VI Conducted by National Examination in Computer Studies, Sri Lanka
* NCCA 1- Basic Level Exam and 2- Intermediate Level Exam Conducted by National Certificate in Computer Application Sri Lanka

**Certificate Courses**

MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Power Point 2000, AutoCad, Page Maker, Corel DRAW, Visual Basic, Pascal, Visual C, C++, dBase III+ and Computer Hardware.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கல்வி நிறுவனம்

* எமது புலமைப்பரிசில் திட்டம் 2000இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இறுதிப்பிரிவு இதுவேயாகும். எனவே இதுவரை தம்மைப் பதிவு செய்யாத மாணவர்கள் விரைவில் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

* எமது நிறுவனத்தின் பழைய மாணவர்கள் அல்லது அவர்களின் உடன்பிறப்புக்களுக்கு கட்டணத்தில் விசேட சலுகை வழங்கப்படும்.

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான எமது மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2001 விரைவில்

கிளை நிறுவனங்கள்:
* IIS நெல்லியடி, கரவெட்டி.
* IIS பிரதான வீதி, சங்கானை.



யாழ் பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

கணக்கீடு - B.முகுந்தன் B.B.A. (Hons)

சனி, ஞாயிறு
A/L 2001
ஒற்றைப் பதிவு - 9 a.m

A/L 2002
தொங்கல் கணக்கு-10 a.m

ஆரம்பம்: 02.09.2000

(77888)



## BARATHY

சித்தன்கேணி

A/L 2002

பௌதிகவியல்
திரு.ஜோன்சன் B.sc.

அலைகளும் அதிர்வுகளும்

ஆரம்பம்: 01.09.2000
(75889) வெள்ளி - 3.15p.m



இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு

லியோனி, மனோ, சுபா
※ லியோனி ஆதரிக்கும் கூட்டணி (இசைநிகழ்ச்சி)
லியோனி, M.S.விஸ்வநாதனின்
※ மெல்லிசை மன்றம் (பாட்டு மாறிப்போச்சு)

ஆங்கிலத் திரைப்படம்
* STIR of ECHOES
* ROMEO MUSTDIE
* ZERO TOLERANCE

விஷ்ணு வீடியோ
K.K.S. Rd, கோண்டாவில்.

(77902)


# என்னைக் கொலை செய்யும் திட்டத்தை ரணில் முன்னரே அறிந்திருந்தார்

## சந்திரிகா குற்றச்சாட்டு

ஜனாதிபதித் தேர்தலின்போது தம்மைப் படுகொலை செய்யும் திட்டம் குறித்து ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னரே அறிந்திருந்தார் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

வெள்ளவாயாவில் இடம்பெற்ற கட்சியின் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி இந்த விடயத்தை பகிரங்கமாக மறுக்க முடியுமா? எனத் தாம் ரணிலுக்குச் சவால் விடுவதாகக் கூறினார்.

ஐ.தே.க. வின் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் புலிகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு இந்தச் சதியில் ஈடுபட்டிருந்தார் என்றும் - எனினும் அந்தச் சதியில தான் உயிர் தப்பி விட்டதாகவும் - ஜனாதிபதி கூறினார். (இ-3)

# வெடிவிபத்தில் நால்வர் உயிரிழப்பு

வவுனியா,செப்.1

பளை மற்றும் கனகம்புளியடிப் பகுதிகளில் இடம்பெற்ற வெவ்வேறு தவறுதலான வெடி விபத்துச் சம்பவங்களில் நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனரென்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி பளைப் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் சாரங்கன் அல்லது அழகன் (மயில்வாகனம் அரவிந்தன் - யாழ்ப்பாணம்), மேஜர் தீசன் அல்லது ஓசையன் (நாகராசா மதிதரன் - கிளிநொச்சி), கப்டன் துளசிவேந்தன் (நாராயணபிள்ளை சதானந்தசிவம் - யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

கடந்த 30 ஆம் திகதி கனகம் புளியடிப் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் அன்பரசன் (துரைசிங்கம் மோகனதாஸ் - மன்னார்) என்பவரும் உயிரிழந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

## ஷெல் தாக்குதலில் இருவர் காயம்

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற ஷெல்தாக்குதல் சம்பவத்தில் வயோதிபர் உட்பட இருவர் காயம் அடைந்தனர்.

கைதடி தெற்கைச் சேர்ந்த இளையதம்பி மாணிக்கம் (வயது77), பூநகரி நாச்சிக்குடாவைச் சேர்ந்த நாகேந்திரன் ரஜித்குமார்(வயது 33) ஆகியோரே காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அஷ்ரப்- பௌசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகும் என்றும் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பைச் செய்த பின்னர் அமைச்சர் அஷ்ரப் திடீரென மக்காவுக்குப் பயணமானது தெரிந்ததே. அவர் நாடு திரும்பிய பின்னர் சமரச முயற்சிகள் ஆரம்பமாகின.

புதன்கிழமை இரவு பத்து மணி தொடக்கம் வியாழன் அதிகாலை ஒன்றரை மணி வரை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அமைச்சர் அஷ்ரப்புக்கும் இடையில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்றன.

அந்தப் பேச்சுக்களின் போது அமைச்சர் பௌசி மீது பொ.ம.ஐ. முன்னணி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதி மன்னிப்புக் கோரினார்

மேற்படி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து ஜனாதிபதியும் அமைச்சர் அஷ்ரப்பும் ஒருவருக்கொருவர் நேற்றுப் பகல் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர். ஜனாதிபதி சந்திரிகா தமது கடிதத்தில் கட்சி உறுப்பினரின்(பௌசியின்) நடத்தைக்காக முஸ்லிம் காங்கிரஸிடமும் அதன் தலைவரிடமும் மன்னிப்புக் கோருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடிதங்கள் பரிமாறப்பட்டதன் பின்னர் அமைச்சர் அஷ்ரப் தமது ராஜினாமாவை விலக்கிக் கொண்டார். முஸ்லிம் காங்கிரஸ் பொ.ம.ஐ. முன்னணியுடன் இணைந்து போட்டியிடவும் முடிவாகியது.

கிழக்கின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் ஏனைய 12 மாவட்டங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சின்னமான கதிரைச் சின்னத்துடன் போட்டியிடும்.

கொழும்பு,கண்டி,வன்னி,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் ஏனைய சில மாவட்டங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணிப் பட்டியலில் போட்டியிடும். ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே தனித்துப் போட்டியிடும்.

மேற்படி முடிவுகளை அங்கீகரிப்பதற்காகவும், வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதற்காகவும் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழு நேற்றிரவு கூடியது. இச்செய்தி எழுதப்படும் வரை கூட்டம் நிறைவுபெறவில்லை.

(அ-14-3)


## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம்

**2000 A/L**

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான

**2001 A/L**

கணித, உயிரியல் பிரிவுகளுக்கான

* DAY CLASS *

இன்று காலை 8.00 மணி (பழைய நேரம்)

* SPECIAL ENGLISH *

இன்று பிற்பகல் 2.00 மணி (பழைய நேரம்)


ஆரம்பம்: இன்று (01.09.2000) வெள்ளி

(77895)



தமிழ் பேசும் மக்களின்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்!
உறவுக்குக் கரம் கொடுப்போம்!!
தமிழ் பேசும் தேசத்தை மீளக் கட்டியெழுப்பிட
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
எமது வாக்குகளை அளித்திடுவோம்! ஈ.பி.டி.பி

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

(C/12783)

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக காணாமல் போனவர்களினது பிரச்சினைக்குத் தீர்வு காண, காணாமற் போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம், ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.